விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 16 வெள்ளிக்கிழமை (29.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 100

## விடுதலைப்புலிகளை உருவாக்கி
# தனி ஈழம் அமைப்போம்

### மாணவர் போராட்டக் குழு எச்சரிக்கை

**(சென்னை), தமிழகத்தில் மாணவர்களே விடுதலைப்புலிகள் இயக்கத்தை தொடங்கி தனி ஈழம் அமைவதற்கான போராட்டத்தை முன்னெடுப்பார்கள் என்று மாணவர் போராட்டக் குழு தெரிவித்துள்ளது.**

மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து அனைத்துக் கல்லூரி மாணவர்கள் மோட்டார் சைக்கிளில் பேரணி தொடங்கினார்கள்.

இப்பேரணியை தொடக்கி வைத்துப் பேசிய மாணவர் போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் பகவான்தாஸ்,

இந்திய அரசு இலங்கை விவகாரத்தில் தலையிட்டு தனி ஈழம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் தமிழகத்தில் மாணவர்களே விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தொடங்கி தனி ஈழம் அமைவதற்கான போராட்டத்தை முன்னெடுப்பார்கள் என்றார்.

இதனிடையே இப் பேரணி தெப்பக்குளத்தில் முடிபடையும் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில், அந்தப் பகுதியில் காங்கிரஸ் அலுவலகம் இருப்பதால் மாணவர்கள் அங்கு தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தெப்பக்குளம் பகுதியில் பொலிஸ் படை குவிக்கப்பட்டது.

இதனிடையே மாணவர்கள் பேரணியாக வருவதைப் பார்த்து காங்கிரஸ் நிர்வாகிகள் வழியில் வைக்கப்பட்டிருந்த தங்களது கட்சிப் பதாகைகளை கழற்றி அலுவலகத்திற்குள் எடுத்துச் சென்று வைத்துவிட்டனர். (எ-11)

## கருணாவில் இருந்து விசாரணை வேண்டும்

### ம. உ. கண்காணிப்பகம்



தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளை கருணாவிடமிருந்து ஆரம்பிக்கப்படவேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பிளவடையும் வரையில் கருணா அம்மான் தமிழீழவிடுதலைப்புலிகளின் முக்கிய இரண்டாம் நிலைத் தலைவராக கடமையாற்றியுள்ளதாக மனிதஉரிமைகள்கண்காணிப்பகம்தெரிவித்துள்ளது.

யுத்த குற்றச் செயல்கள் தொடர்பில் கருணா விசாரணை நடத்த வேண்டுமெனக் கோரியதன் மூலம் அவரது *(20ஆம் பக்கம் பார்க்க)*

## கச்சதீவு வேண்டுமானால் இந்.தமிழர் திரும்ப வேண்டும்

### லக்பல சேனா நிபந்தனை

(கொழும்பு)

கச்சதீவை மீட்க சட்டரீதியாக நடவடிக்கை எடுப்போம் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியதையடுத்து இலங்கையின் லக் பல சேனா அமைப்பின் தலைவர் அதற்கு பதில் அளித்துள்ளார்.

இதுகுறித்து இணையத்தளம் ஒன்றில் வெளியான செய்தி வருமாறு,

கச்சதீவை ஜெயலலிதா கேட்டபடி கொடுத்து விடலாம். ஆனால் ஒரு நிபந்தனையுடன் கொடுக்க வேண்டும் என்று லக் பல சேனா அமைப்பின் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## விபச்சார விடுதி யாழில் முற்றுகை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அருகில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த விபச்சார விடுதியொன்று நேற்று பிற்பகல் முற்றுகையிடப்பட்டது.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவக அமைப்பாளர் எஸ்.நிஷாந்தனின் ஒழுங்கமைப்பில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன், யாழ்.பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் ஊடகவியலாளர்களுடன் விடுதியினை ஆதாரத்துடன் முற்றுகையிட்டனர்.

இவ்விடுதியானது பிடிக்கப்படும்போது குறித்த விடுதியில் 4பெண்கள் மற்றும் 3 ஆண்கள் அங்கிருந்துள்ளனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வேலை *(20ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கையர் என்ற அடையாளம் தமிழ் மக்களுக்கும் தேவை!

### ரணில் வலியுறுத்தல்



இலங்கையில் முப்பது வருடங்கள் இடம்பெற்ற யுத்தத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர்.

இருப்பினும் தமிழர்களும் தமிழ்த் தலைவர்களும் இலங்கையர் என்ற அடையாளம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும், அந்த உரிமை தமக்கு கிடைக்க வேண்டும் என்றும் கேட்கின்றனர். இதைத்தான் சர்வ தேசமும் வலியுறுத்தி நிற்கின்றது.

இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## இன்னொரு பயங்கரவாதத்தை உருவாக்க அரசு முயற்சிக்கிறது

### ஐ.தே. கட்சி தெரிவிப்பு

முற்போக்குவாத அமைப்புகளை போஷித்து வளர்க்கும் அரசாங்கம் நாட்டில் இன்னொரு பயங்கரவாத அமைப்பை உருவாக்குவதற்கு வழிவகுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள முற்போக்குவாத அமைப்புக்களை போஷித்து வளர்க்கும் செயற்பாடானது நாட்டில் இன்னொரு பயங்கரவாத அமைப்பை உருவாக்கும் செயலாகவுள்ளது.

இதனை அரந்தலாவை பிக்குகள் மீது இடம்பெற்ற *(20ஆம் பக்கம் பார்க்க)*

## அரசிலிருந்து வெளியேறியதால் தமிழர் பிரச்சினை தீர்ந்ததா?

### கேள்வி எழுப்புகிறார் கருணாநிதி




(சென்னை)

இலங்கை விவகாரத்தில், மத்திய அரசிலிருந்து தி.மு.க வெளியே வந்துள்ளதால் இலங்கைதமிழர்களின்நிலையில் என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது என தி.மு.க தலைவர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து கருணாநிதி தனது கட்சி *(20ஆம் பக்கம் பார்க்க)*

## தமிழக எதிர்ப்பை முறியடிக்க அரசாங்கத் தரப்பு நடவடிக்கை



தமிழகத்தில் இலங்கைக்கு எதிராக அதிகரித்துவரும் எதிர்ப்புகளை இல்லாதொழிப்பதற்கும், இலங்கை தொடர்பில் தமிழகத்தின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் ஆளும் தரப்பின் சிரேஷ்ட அமைச்சர்கள் வெகுவிரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளனர் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.


நாட்டிலுள்ள முஸ்லிம்களுக்கு நேரடியாகவே எதிர்ப்புத் தெரிவிக்கும் பொது பல சேனா அமைப்பின் காரியாலயத்தை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ திறந்துவைத்து அவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டனர்.

இந்நிலையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் *(20ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# தமிழீழம் காணும் வரையும் தமிழக மாணவர் எழுச்சி ஓயாது



## சீமான் முழக்கம்

(பேர்ன்)

இலங்கையை பகை நாடாக அறிவிக்குமாறு கோரும் தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அதே தீர்மானம் இந்திய நாடாளுமன்றத்திலும் நிறைவேற்றப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் தெரிவித்தார்.

சுவிஸ் நாட்டிற்கு முதற்தடவையாக சென்றுள்ள செந்தமிழன் சீமான், "இருப்பாய் தமிழா நெருப்பாய்" என்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுவிஸ், செலத்துண் மாநிலத்தில் நேற்று முன்தினம் மாலை இந்நிகழ்வு நடைபெற்றது. குறுகிய கால அழைப்பில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சீமான் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக எழுச்சி உரை நிகழ்த்தினார்.

இன்று தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மாணவர் எழுச்சி கணப்பொழுதில் உருவான ஒன்றல்ல. அதன்பின்னணியில்நாம்தமிழர்கட்சித்தொண்டர்கள் உட்பட பல ஆயிரக் கணக்கான தமிழ் உறவுகளின்உழைப்புள்ளதாகத்தெரிவித்தஅவர்,

தற்போது தமிழ்நாட்டு உறவுகளின் நெஞ்சங்களில் கொழுந்துவிட்டு எரியும் தீ, தமிழீழம் என்ற இலட்சியத்தை எட்டும் வரை அணையாது ஒளிரும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கட்சியின் சட்ட ஆலோசகர் "தடா" சந்திரசேகர் கலந்து கொண்டு உரையாற்றினார். பேர்ன் நர்த்தனாலய நடனப் பாடசாலை மாணவியரின் நடனம், செல்வி ரம்யா சிவானந்தராஜா அவர்களின் எழுச்சிப் பாடல் ஆகிய நிகழ்வுகளும் இடம் பெற்றன. (எ-11)

# மாத்தளை மனித புதைகுழி உரிய விசாரணை வேண்டும்

## ஜே.வி.பி. வேண்டுகோள்

(கொழும்பு)

மாத்தளை மனிதப் புதைகுழி சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட்டு, அதில் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் கூறியுள்ளார்.

மாத்தளையில் மருத்துவமனை வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி 1986 - 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியைச் சேர்ந்தது என்று நீதி மன்றத்துக்கு கிடைத்த அறிக்கை ஒன்று கூறியுள்ளது.

அந்தக் காலகட்டத்தில் ஜே.வி.பி. கட்சி யின் 2-வது கிளர்ச்சி இலங்கையில் நடந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அந்தப் பகுதியிலும் அந்தக் காலகட்டத்திலும் பல ஜே.வி.பியினர் அரசாங்கப் படைகளால் கொலை செய்யப்பட்டதாக ஜே.வி.பி தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வந்துள்ளது.

இதனால் இந்த நீதிமன்ற அறிவிப்பு குறித்து ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ராமலிங்கம் சந்திரசேகரனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன்அந்தக்காலப்பகுதியில்மாத்தளையில் இலங்கை இராணுவத்துக்கு பொறுப்பாக தற்போதைய பாதுகாப்புத்துறைச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ செயற்பட்ட தாகத் தற்போதைய துணை அமைச்சர் ஒருவரே கூறும் நிலையில், அது குறித்து உரிய விசாரணை நடத்தப்பட்டு உரியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் சந்திரசேகரன் கூறினார். (எ-11)


CAR SALE

NISSHAN SUNNY
Super Salloona
Silver Colour
JJ-XXXX
MANUAL GEAR
T.P:-0774521392

(C-2816)



யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இன்று முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு


# கைதிகளின் தகவலும் கணனி மயமாகும்

(கொழும்பு)

சிறைச்சாலைக் கைதிகளின் தகவல்கள் கணனி மயப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கணனி மயப்படுத்த இலங்கை தொழில் நுட்ப முகவரகமும், சிறைச்சாலை அமைச்சும் கூட்டாக இணைந்து நாட்டில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துக் கைதிகளின் தகவல்களைப் பதிய நடவடிக்கை எடுத்துள்ளன.

கைதிகளுக்கு புனர்வாழ்வளித்தல் அவர்களுக்கான வசதிகளை மேம்படுத்தல், அவர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்குகைதிகளின் தகவல்களை திரட்டி வைத்திருத்தல் அவசியமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெலிக்கடைச் சிறைச்சாலையை மையமாகக் கொண்டு இந்தத் தகவல்களை கணனி மயப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளது. தகவல்களின் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)


வாழ்த்துகிறோம்

திரு.சின்னையா சிவராசா (போல்)



43ஆவது அகவையில் கால் பதிக்கும் வேலணை பிரதேச சபை தவிசாளர் திரு.சின்னையா சிவராசா (போல்) அவர்கள் அரசியல் பாதையில் அபிவிருத்தி நோக்கோடு செயலாற்றி இன்னும் பல அகவைகள் காண மனதார வாழ்த்துகின்றோம்

புனித பிலிப்ஸ் விளையாட்டுக் கழகம், அல்லைப்பிட்டி.

(C-2817)



பெயர் மாற்றம்

4ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு எனும் முகவரியில் வசித்துவந்த **இராசதுரை நடேசன்** எனும் பெயரால் அழைக்கப்பட்ட நான் இன்று முதல் (29/03/2013) **இராசதுரை நடேஸ்வரன்** எனும் பெயரால் அழைக்கப்படுவேன். அத்துடன் என்னுடைய சகல ஆவணங்களிலும் இப்பெயரே பயன்படுத்துவேன் என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றேன். (சி-2261)



பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

25% கழிவு

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-1650)


# நெல்சன் மண்டேலா மருத்துவமனையில்

(கேப்டவுண்)

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா மீண்டும் ஏற்பட்டுள்ள நுரையீரல் தொற்றுக்காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவசரமாக மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சையளிக்க வேண்டிய தேவையில் நெல்சன் மண்டேலாவின் உடல்நிலை இருப்பதாக அவரை பராமரித்து வரும் மருத்துவர்கள் கருதியதாகத் தென்னாபிரிக்க அதிபரின் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதனையடுத்து நேற்று முன்தினம் நள்ளிரவுக்கு முன்னதாகவே அவரை அவசரமாக மருத்துவமனையில் அனுமதித்ததாக அதிபர் அலுவலக பேச்சாளர் மக் மஹாராஜ் தெரிவித்தார்.

94 வயதான நெல்சன் மண்டேலா குணமடைய வேண்டும் என்று பிரார்த்திக்குமாறு தென்னாபிரிக்காவின் அதிபர் ஜேக்கப் சூமா தனது நாட்டு மக்களையும் உலக மக்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

நுரையீரல் தொற்றுக்காரணமாகவும் பித்தக்கற்கள் காரணமாகவும் கடந்த டிசம்பரிலும் மண்டேலா 18 நாட்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

1980களில் ரோபென் தீவுகளில் சிறை வைக்கப்பட்டிருந்த போது நெல்சன் மண்டேலா காசநோய்த் தொற்றுக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இலங்கை மீனவர்கள் விடுதலையாகினர்

(சென்னை)

தமிழகத்தில் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்களை விடுதலை செய்ய இராமநாதபுரம் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாவட்ட நிர்வாக அதிகாரிகள் மேற்கொண்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்படுவதாக நீதிமன்றம் தெரிவித்தது. கடந்த 17-ம் திகதி குறித்த ஐந்து மீனவர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை தமிழகத்தில் தடுப்பில் இருந்த 10 இலங்கை மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர். அவர்கள் இன்றைய தினம் நாடு திரும்பவுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-11)

# மகா கும்பாபிஷேகம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி திருவருள் மிகு கந்தசாமி கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நேற்று எண்ணெய்காப்புச் சாத்துதல் நடைபெற்றது. (ஏ)

# உப தபாலதிபர்கள் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் பேசும் உப தபாலதிபர்கள் சங்க யாழ்ப்பாணக் கிளையின் பொதுக்கூட்டமும், அங்கத்தவர்கள் கௌரவிப்பும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல நோக்குக்கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் என்.இரத்தினசிங்கம் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் அஞ்சல் அத்தியட்சகர் க.புஸ்பநாதன், பிராந்திய நிர்வாக உத்தியோகத்தர் ஐ.சின்னப்பு, பிராந்தியபிரதமகணக்காளர்திருமதிஎஸ்.கலைச்செல்வன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் உப தபாலதிபர்களாக கடமையாற்றி பதவியுயர்வு பெற்ற மற்றும் ஓய்வுபெற்றவர்கள் கௌரவிக்கப்படுவதுடன் புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்படவுள்ளது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## விண்வெளியும் மனநிலையும்

"ஒரு 20 அடி நீளம், 18 அடி அகலமும் உள்ள அறையொன்றினுள்ளே இரு நபர்களை வைத்து பூட்டுங்கள்; அவர்களுக்கும் வெளியுலகத்திற்கும் எதுவிதமான தொடர்புகளும் இருக்கக் கூடாது. அனைத்தையும் துண்டிக்க வேண்டும். ஓரிரு மாதங்கள் வரை அவர்களை வெளியிலேயே விடக்கூடாது. இப்படியாகச் செய்தால், ஒரு கொலை நடைபெறுவதற்கான சூழ்நிலையை உருவாக்கி விட்டது என்று அர்த்தம்.

ரஷ்ய விண்வெளி வீரர் ஒருவர் எழுதி வைத்திருந்த தினசரி குறிப்பேட்டில் இவ்வாறு இருந்தது. அவர் பெயர் வாலரி நியு மின். இவர் 1980 ஆம் ஆண்டு இன்னொருவருடன் கூடி விண் வெளிக்குப் போய் திரும்பி வந்தவர்.

ரொக்கெட்டிலே விண்வெளிக்குச் சென்று சிறிது நாட்கள் அங்கே தங்கி விட்டு திரும்பி வரும்போது அவர்களது மனநிலை மிகவும் பாதிப்படைந்து காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரொக்கெட்டிலே மிகவும் துணிச்சலாகத்தான் புறப்பட்டார்கள். இருந்தாலும் ரொக்கெட் பயணிக்கும் பாதையோ எல்லையில்லாமல் பரந்து கிடக்கும் வானமாகும்.

அங்கே என்ன நடக்கும் என்று யாருக்குமே தெரியாது. எந்தக் கணனியென்றாலும் அதைத் துல்லியமாகக் கணக்கு சொல்லாது. பயணிக்கு ரொக்கெட்டில் ஏதாவது கோளாறு நேர்ந்தால் வீதியில் ஓரமாக நிறுத்தி பழுது பார்க்க முடியுமா? போனால் போனதுதான்.

சுவாசிப்பதற்கு போதியளவு வளி கிடைக்காது. பகல் என்றால் வெப்பமாகவும்; இரவென்றால் நினைத்துப் பார்க்க முடியாதளவு இருள் சூழ்ந்தும் காணப்படும்.

இது மாதிரியான அபாயத்தை மனதிலே சுமந்து கொண்டு தான் விண்வெளி வீரர்கள் ரொக்கெட்டிலே பயணிக்கிறார்கள். ரொக்கெட் எவ்வளவு பெரியது? ஒரு சிறிய கூடுதான் விண் வெளி வீரன் அமரும் இடமாக அமைந்திருக்கும். உள்ளே இருந்து அழுதாலும் சிரித்தாலும் தரையில் இருந்துதான் பதில் வர வேண்டும்.

1982 இலே இரண்டு விண்வெளி வீரர்கள் ஒரே விண்கலத்திலே புறப்பட்டார்கள்.

இவர்கள் இருவரும் விண்கலத்தினுள் அடி வைத்ததிலிருந்து பேசுவது கிடையாது. மிகவும் அவசியம் என்றால், ஓரிரு வார்த்தைகள் பேசிக் கொள்வார்கள். இப்படியாக புழுக்கமான, இறுக்கமான, மௌனமான சூழ்நிலையிலேயே விண்வெளி வீரர்கள் 211 நாட்களைக் கடத்தி இருக்கிறார்கள்.

இவர்கள் இருவரும் இப்படியாக பல்லைக் கடித்துக் கொண்டு, 211 நாட்களையும் விண்ணிலே செலவு செய்து விட்டு, தப்பினோம்; பிழைத்தோம் என்று மீண்டும் பூமிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்த இருவரில் ஒருவர்தான் இதையெல்லாம் தனது தினக் குறிப்பில் எழுதி வைத்துள்ளார். இக் குறிப்பேடு 1983 ஆம் ஆண்டிலே சோவியத் யூனியனிலே புத்தகமாக வெளிவந்து ள்ளது.

விண்வெளி வீரர்கள் மீண்டும் பூமியில் தரை இறங்கியதும் அவர்கள் இரத்தப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். அப்போது ஹைட்ரோ கார்ட்டிடுசோன், காட்டி கோலமன் ஆகிய வேதியியல் பொருட்கள் இவர்களது உடம்பில் சுரந்திருப்பது கண்டறியப்படும். இந்த வேதியியல் பொருளானது ஒரு சாதாரண மனிதன் பதற்றமடையும் போது ஏற்படுகிறது. பின்னர் அவர் ஓய்வெடுக்கும் போது... இப்பொருள் இயல்பாகவே மறைந்து விடும். ஆனால், விண்வெளி வீரர்களின் இரத்தத்திலே இது எப்போதுமே இருக்கிறது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சிலாவத்தை கிராம அபிவிருத்தி சங்கத்தை இயங்க வைக்க நடவடிக்கை எடுங்கள்

## மக்கள் மகஜர் அனுப்பிவைத்தனர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட சிலாவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் புதிய நிர்வாக தெரிவு இடம்பெறவேண்டுமென அப்பகுதியில் உள்ள 192 குடும்பங்களால் கையொப்பமிடப்பட்ட மகஜர் முல்லை. மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகனுக்கும் கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் பொ. குகநாதனுக்கும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது. அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

ஒரு வருடத்திற்கு மேலாக சிலாவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகக் கூட்டம், பொதுக் கூட்டம் கூட்டப்படாமல் உள்ளது. கடந்த வருடம் ஜூன் மாதம் பிரதேச செயலாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கு ஏழு நிர்வாக உறுப்பினர்கள் சில நடைமுறைகளின் முரண்பாட்டால் பதவி விலகல் கடிதம் அனுப்பியுள்ளோம்.

அதற்கு அமைவாக நிர்வாக கூட்டம் கூட்டப்பட்டு பொதுக் கூட்டம் கூட்டப்பட வேண்டும் என திகதி குறிப்பிடப்பட்டது. இந்நிலையில் அக் கூட்டம் முதல் நாள் இடை நிறுத்தப்பட்டது. அதன் பிற்பாடு 7 உறுப்பினர்களின் செயற்பாடு ஒத்துழைப்பு இல்லாமல் மீதி நிர்வாக உறுப்பினர்கள் மட்டுமே எமது கிராமத்தின் சில முறைகேடான செயற்பாட்டை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி இவர்களின் இரண்டு வருட கால சேவையும் நிறைவு பெற்றது. மீண்டும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்ட போது கடந்த 22 ஆம் திகதி பொதுக் கூட்ட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்பட்ட நிலையில் கடந்த 21 ஆம் திகதி கூட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இவர்கள் இதுவரைக்கும் கணக்கறிக்கையோ கூட்டறிக்கையோ சமர்ப்பிக்காமல் தன்னிச்சையான செயற்பாட்டை மேற்கொண்டு கிராம மக்களின் மன உளைச்சலை ஏற்படுத்தி வருகின்றார்கள்.

எனவே நாம் 7 உறுப்பினர்களும் சிலாவத்தை மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடனும்கிராமத்தின்ஏனைய நலன் விரும்பிகளுடன் சேர்ந்து இதனை தங்களுக்கு தயவுடன் கையொப்பமிட்டு தெரியப்படுத்துகின்றோம்.

எனவே எமக்கு நல்ல முடிவினை பெற்றுத் தந்து சிலாவத்தை கிராமம் மேம்பட ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-3-267)

# சர்வதேச மகளிர் தினம் ஏப்ரல் 3 இல் பேரணி

யாழ். மாவட்டத்தில் பெண்களது தளங்களையும் குரல்களையும் மீட்டெடுத்தல் எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமாக நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.30 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் திரைப்பட விழா இடம்பெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து ஊர்வலம் ஒன்று ஆரம்பமாகவுள்ளது. எனவே அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு செயற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 140 | 130 | 140 |
| தக்காளி | 100 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 60 |
| கரட் | 100 | 100 | 120 |
| பூசணி | 60 | 40 | 60 |
| புடோல் | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60-70 | 50-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 140 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 100 | 90 | 80 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 |
| பீற்றூட் | 80 | 60 | 80 |
| கறிமிளகாய் | 110 | 90 | 120 |
| முருங்கைக்காய் | -- | 600 | -- |
| போஞ்சி | 100 | 110 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | -- | -- |
| கீரை - 1 பிடி | 15-20 | 20 | 30 |
| தேசிக்காய் | 60 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 35-50 | 40-45 |
| இராவள்ளி | 80 | 90 | 100 |
| வெங்காயப்பூ | [illegible] | 180 | 160 |

# இராசி பலன்

29.03.2013
(பங்குனி 16, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு
துதியை பிற்பகல் 1.02 மணிவரை
சித்திரை முற்பகல் 9.25 மணிவரை
இராகுகாலம் 10.43-12.13 மணிவரை
சுபநேரம் 6.13-7.43 மணிவரை
காரைக்காலம்மையார் குருபூசை, பெரிய வெள்ளி

**மேடம்** குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்வீர்கள், உடல்நலம் சீராகும், எடுத்த காரியங்கள் கைகூடும், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**இடபம்** உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், வீட்டுத் தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, நல்லவர்களுடனான தொடர்புகள் அதிகரிக்கும்.

**கடகம்** பெற்றோர் மீது அதிக பிரியம் காட்டுவீர்கள், தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்து உதவ முன்வருவர், மனையில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**சிங்கம்** அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், காரிய சித்தியுண்டு, சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படைவீர்கள்.

**கன்னி** தொழில் வளர்ச்சிக்கு மங்கையர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், பணியாளர் தொல்லை அகலும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சிறிய விடயங்களுக்கும் சஞ்சலப்படும் சூழ்நிலை உருவாகும், சுப செலவுகள் கூடும், அமைதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**தனுசு** இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்கள் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** ஆடம்பரப் பொருட்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் முன்னேற்றகரமாக அமையும், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், போசன நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** வழிபாட்டால் சிறப்பினைக்காண வேண்டிய நாள், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், தொலைபேசித் தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், தேகநலனில் உற்சாகம் பிறக்கும்.

**மீனம்** எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதம் ஏற்பட்டு உற்சாகம் குறையும், திடீர்ச் செலவுகளால் பொருளாதாரச் சிக்கல் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடி-கொடிகாமம் வீதியை புனரமையுங்கள்


(தும்பளை)

நெல்லியடி கொடிகாமம் வீதி பயணிக்க முடியாத நிலையில் காணப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த வீதியானது கரடுமுரடாக காணப்படுவதால் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நின்று விபத்துக்களை எதிர் கொள்ள வேண்டிய அவல நிலையும் உள்ளது.

இவ்வீதியால் தினமும் பெருமளவு மக்கள் பயணித்து வருகின்றனர். இவ்வீதியை புனரமைக்குமாறு பலமுறை பலரிடம் கோரிக்கை விடுத்தபோதும் இவ்வீதி புனரமைக்கபடவில்லை என குற்றம் சுமத்தப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு மேற்குறித்த வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-19)




நன்றி: தினமலர்

## தேசிய கல்வியியற் கல்லூரி பட்டச்சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2009/2011 ஆம் ஆண்டில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களின் சுயவிபரங்கள் தேவைப்படுகின்றது. இவ் ஆசிரியர்கள் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகை தரும்படி கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார். (அ)

## கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகிகள் தெரிவு

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்தி சங்க கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் கண்ணகை சனசமூக நிலைய மண்டபத்தில் மட்டுவில் வடக்கு கிராம சேவகர் ஸ்ரீவிக்னராஜா தலைமையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக பொ.தெய்வேந்திரன், செயலாளராக க.சுதாகரன், பொருளாளராக ச.ஸ்ரீகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கிராமஅபிவிருத்திசங்கம்நீண்டகாலமாக இயங்காதிருந்து தற்போது மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-14)

## அரையிறுதி தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி விநாயகர் சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் தாச்சி சுற்றுப் போட்டியில் தென்மராட்சி பகுதியினருக்கான 3 ஆம் இடத்திற்கான தாச்சி சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெற்றது.

இப்போட்டியில் கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டு கழகத்தை எதிர்த்து களமிறங்கிய கைதடி நாவற்குழி சரஸ்வதி விளையாட்டு கழகம் 12:6 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

இதேவேளை இன்றைய தினம் இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள வலிகாம பகுதியினருக்கான அரையிறுதி தாச்சி சுற்றுப் போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தவிநாயகர் விளையாட்டு கழகத்தை எதிர்த்து புதுமடம் வைகரை விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (அ-3)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(மட்டுவில்)

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மட்டுவில் கண்ணகை விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த போட்டியில் 20 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றுகின்றன. (அ-3-14)

## சிலுவைப்பாதை

(கரணவாய்)

கரவெட்டி பரலோக மாதா கோவிலில் இருந்து சிலுவைப் பாதை இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நெல்லியடி அந்தோனியார் கோவிலை வந்தடையவுள்ளதாக பங்குத்தந்தை டெஜின்போல் அறிவித்துள்ளார். (அ-3-60)

# காணாமல் போனோரை தேடி அலைந்து திரியும் உறவினர்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் காணாமல் போன தமிழர்களில் 36 பேர் மீண்டுள்ளதாக வெளியாகிய தகவல்களினை தொடர்ந்து இது தொடர்பில் உறுதியான தகவல்கள் கிடைக்கப் பெறாமையினால் காணாமல் போனவர்களின் உறவுகள் செய்வதறியாது திக்கற்ற நிலையிலுள்ளனர்.

இவர்கள் மனிதவுரிமை ஆணைக்குழுவில் யாழ்.பிராந்திய காரியாலயத்திற்கும் யாழ்.நீதிமன்றத்திற்கும் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கும் அலைந்து திரிவதனையும் அவதானிக்க முடிகின்றது.

வடபகுதியில் யுத்தத்தின்போதும் யுத்தம் முடிவடைந்த பின்னரான காலப் பகுதியிலும் காணாமற் போன தமிழர்களில் 36 பேர் மீண்டுள்ளனர்.

இவர்களின் பெயர் விபரங்கள் ஜெனீவாவில் இலங்கை அரசினால் வெளியிடப்பட்டன.

அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அரசு தெரிவித்ததாக காணாமற் போனோரினை தேடியறியும் குழுவின் செயலாளர் எஸ்.மகேந்திரம் அறிவித்துள்ளார்.

அத்துடன் மீண்டதாக கூறப்பட்ட 36 தமிழர்களின் பெயர் விபரங்களினையும் அவர் வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் தமது உறவுகளினை நீண்ட காலமாக தேடி சோர்ந்து போன சொந்தங்கள் மீண்டும் தமது உறவுகள் உயிரோடு இருப்பதாக பத்திரிகைகளில் வெளியான செய்திகளினை தொடர்ந்து மனிதவுரிமை ஆணைக்குழு, நீதிமன்றம், பொலிஸ் நிலையம் என அனைத்து இடங்களிற்கும் சென்று பத்திரிகைகளில் தமது உறவுகளின் பெயர்கள் வந்திருப்பதாகவும் அவர்களினை மீட்டுத் தருமாறு தினம் தினம் மன்றாட்டமாக கேட்டு வருகின்றனர்.

எனினும் மனிதவுரிமை ஆணைக்குழுவினரோ பொலிஸாரோ இது தொடர்பில் தாம் எதுவும் செய்ய முடியாது எனவும் உங்கள் பிள்ளைகள் வந்தால் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவர் என்வும் கூறிவருகின்றனர்.

சிலருக்கு யாழ். நீதிமன்றில் இது தொடர்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் அங்கே சென்று வழக்காடுமாறும் கடிதமும் கிடைத்துள்ளது.

எனினும் நீதிமன்ற பதிவாளரிடம் வழக்கு இலக்கத்தினை கொடுத்தபோது அவ்வாறானதொரு வழக்கு இங்கு பதிவு செய்யப்படவில்லை என கூறுவதாக காணாமல் போனோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் காணாமல் போனோரினை தேடியறியும் குழுவின் செயலாளரான எஸ்.மகேந்திரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது உரிய பதிலளிக்கவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் தமது பிள்ளைகளினை, உறவுகளினை எங்கே சென்று மீட்பதென்று தெரியாது நிர்க்கதி நிலையில் உள்ளனர்.

மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்திற்கு தினம் தினம் இவ்வாறு மக்கள் அலைந்து திரிவதாக ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மீண்டதாக கூறப்படுகின்ற 36 பேரின் பெயர் விபரங்களினை காணாமல் போனோரினை தேடியறியும் குழுவின் செயலாளர் எஸ்.மகேந்திரனிடம் கோரியதாகவும் எனினும் முதலில் சம்மதித்த அவர் பின்னர் தருவதற்கு மறுத்துவிட்டார். இதனால் 'தற்போது மக்களிடம் எழுந்துள்ள தவிப்பினை தணிக்க முடியாதுள்ளதாகவும் அவர்கள் தினம் தினம் உறவுகளினை தேடி அலைந்து திரிவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

மேலும் யுத்தத்தில் துவண்டுபோய் தமது உறவுகளினை பறி கொடுத்து தேடி அந்தரிக்கும் மக்களினை வைத்து அரசியல் நடத்தாதீர்கள்.

முற்போக்கு சக்திகள் என்று நாம் நினைப்பவர்கள் எம்மை அடிமைகளாக்கி வியாபாரம் செய்ய அனுமதிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)








நல்லூர் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இதில் தொடக்க நிகழ்விற்காக ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைக்கப்படுவதையும் இப்போட்டியில் முதலிடம் பெற்ற அரியாலை ஐக்கிய கழகத்தினர் வெற்றிக் கேடயத்துடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் ஒற்றுமையுடன் செயற்படுங்கள்!

## முஸ்லிம்களுக்கு சம்பந்தன் அழைப்பு

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய அரசியல் நிலைப்பாட்டை அக்கட்சி மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

புல்மோட்டை, ஜின்னாபுரம் எனுமிடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தல் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக நியமிக்க தயார் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பகிரங்கமாக நான் அறிவித்திருந்தேன்.

தேர்தல் முடிவுகளின்படி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 4 ஆசனங்களையும் பெற்று மொத்தமாக 22 ஆசனங்களுடன் நாம் பெரும்பான்மையாக இருந்தோம்.

ஆனால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கட்சியில் உள்ள ஒரு முஸ்லிமை முதலமைச்சராக வருவதற்கு ஆதரவளித்தது. திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை முஸ்லிம் கிராமத்தில் முஸ்லிம் மக்களின் காணிகள் இன்று பறிபோகின்ற ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

எமது கைகளில் முஸ்லிம் முதலமைச்சர் பதவி இருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. தந்தை செல்வா காலத்திலிருந்து தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தமிழ் பேசும் சமூகம் என்றுதான் நடந்து வந்துள்ளோம்.

பண்டா–செல்வா மற்றும் டட்லி–செல்வா ஒப்பந்தம் ஆகியன வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வருகின்ற பிரதேசம் என்ற அடிப் படையில் சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றே செய்துகொள்ளப்பட்டன.

இன்று இனப்பிரச்சினை சர்வதேச மயப் படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச சமூகத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற தவறும் பட்சத்தில் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும்.

இந்த தருணத்தில் முஸ்லிம் மக்கள், தமிழ் மக்கள் என்ற வேறுபாடின்றி தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் ஒற்றுமையாக செயற்பட வேண்டும், முஸ்லிம் மக்களின் கைகளில் தான் இது தங்கியுள்ளது என்றார். (அ–2)

# சட்ட சபை தீர்மானம் குறித்து மன்மோகன் முடிவெடுப்பார்

## அமைச்சர் நாராயணசாமி

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து பிரதமர் முடிபு எடுப்பார் என நாராயணசாமி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

இலங்கைத் தூதர் காரியவசம் தனது அதிகாரத்துக்கு உட்பட்டு பேச வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். தமிழக மாணவர்களின் முக்கிய கோரிக்கையான தமிழ் ஈழம் தொடர்பாக இந்தியா வற்புறுத்தினால் காஷ்மீரை தனியாகப் பிரித்துக் கொடுக்க பாகிஸ்தான் வலியுறுத்தினால் நிலைமை என்னவாகும் என நாராயணசாமி கேள்வி எழுப்பினார்.

காஷ்மீரில் மனித உரிமை மீறப்பட்டதாக ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டு வந்தால் இந்தியா ஏற்றுக் கொள்ளுமா? எனவும் அவர் வினவினார். இலங்கைக்கு எதிரான தமிழக மாணவர்களின் போராட்டம் தொடர்பாக சட்டப் பேரவையில் தி.மு.க., இடதுசாரிகள், மனித நேய மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகள் நேற்று முன்தினம் சிறப்பு கவனஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தன.

அப்போது தமிழீழம் அமைய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தை தாக்கல் செய்து முதலமைச்சர் ஜெயலலிதா பதிலளித்து உரையாற்றினார்.

இலங்கையில் இறுதிப் போர் முடிபுக்கு வந்த பின்னர் மூன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் எவ்வித அடிப்படை வசதியுமின்றி வாழ்ந்து வருவதாக ஜெயலலிதா தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்தில் தி.மு.க. இரட்டை வேடம் போடுவதாகவும் ஜெயலலிதா குற்றம் சாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ–2)

# யாழ்.தமிழ்ச்சங்கத்தின் திருவள்ளுவர் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத் தும் திருவள்ளுவர் விழா இன்று வெள் ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் தமிழ்ச் சங்க உப தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையினரின் ஆதரவுடன் நடைபெறும் இந் நிகழ்வில் வரவேற்புரையை யாழ். மத்திய கல்லூரியின் பகுதித் தலைவர் ப.திருஞானசம்பந்தனும் தொடக்கவுரையை யாழ்ப் பாண தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரி யர். தி. வேல்நம்பியும் ஆற்றுவர்.

யாழ் பல்கலைக்கழக கல்வியியற்துறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் **பன்முகநோக்கில் வள்ளுவம்** என்ற தொனிப் பொருளில் கருத்தரங்கம் இடம் பெறவுள்ளது.

இதில் **அரசியல்** என்ற தலைப்பில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரி யர் ந.குகபரனும் **நட்பு** என்ற தலைப்பில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அ.பௌணந்தியும் **அன்பு** என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழ கத் தமிழ்துறை விடுகையாண்டு மாணவி ர.மீராவும் **இல்லறம்** என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் அ.வதனரேகாவும் கருத்துரைகளை வழங்குவர்.

அத்தோடு வள்ளுவர் பெரிதும் வலியுறுத்த முனைவது **இல்லறச் சிறப்பா? துறவற மேன்மையா? ஊழின் வலியா?** என்ற தலைப்பில் தமிழ்ச்சங்க செயலாளர் சொல் லின் செல்வர் இரா.செல்வ வடிவேல் தலைமையில் முக் கோணப் பட்டி மன்றமும் இடம் பெறும். (அ–6)


**அன்பு வாசகர்களே...!**

உங்கள் வலம்புரியில் ஈழத்தின் தலை சிறந்த எழுத்தாளர் செங்கை ஆழியன் எழுதும்

**மாமன்னன் சங்கிலியன்**

தொடர்





# கழகங்களுக்கான போட்டிகள்

(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான இவ்வாண்டுக்கான விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி வல்வெட்டித்துறை நெற்கொழு பொதுவிளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர். மோகனதாஸ், சிதம்பரா கல்லூரி அதிபர் கே.இராஜதுரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் நடைபெறவுள்ள உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டு கழகத்தை எதிர்த்து வல்வை ஐக்கிய விளையாட்டு கழகம் மோதவுள்ளது. (அ–3–19)

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வல்வை கணபதி பாலர் பாட சாலை பாலர்களினது கல்விசார் மற்றும் கைவினைப் பொருட்க ளின் ஆக்கக் கண்காட்சி நாளை சனிக்கிழமை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மேற்படி பாட சாலை மண்டபத்தில் நடைபெறு மென குறித்த பாடசாலையின் தலை வர் அறிவித்துள்ளார். (அ–2)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L (UK- PR)<br>தொ.இ: B -1485 | பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>தகைமை/ தொழில்: MSc<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: G -1474 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 5'4"<br>கி.பா: 70, 7 இல் செவ்.<br>தகைமை/தொழில்: BA,MA (பத்திரிகை ஆசிரியர்)<br>தொ.இ: B -1486 | பிறப்பு: 1986 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்: கேட்டை 2, 12 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/ தொழில்: A/L, போதனாசிரியர் (அரச)<br>தொ.இ: G-1508 |
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4, 7இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்:Computer Hardware (தனியார் கம்பனி)<br>தொ.இ: B -1492 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருசீரிடம் 3<br>தகைமை/ தொழில்:A/L<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: G -1509 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>உயரம்: 5'8"<br>கி.பா: 39<br>தகைமை/தொழில்: A/L, மருத்துவம் (பிரான்ஸ் Not-PR)<br>தொ.இ: B -1502 | பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4, 12 இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/ தொழில்: BSc (Hons) (UK PR)<br>தொ.இ: G -1511 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# தலைமைத்துவமும் முகாமைத்துவமும்

(அறிமுகம்)

தலைமைத்துவத்திற்கும் முகாமைத்துவத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. தலைமைத்துவம் பற்றிய வரைவிலக்கணம் முகாமைத்துவத்திற்குப் பொருந்தினாலும் இவை இரண்டுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. தலைமைத்துவம் குறித்த சிந்தனைகள் பிளேட்டோ, அரிஸ்டோட்டில் ஆகியோரின் காலத்தில் தோற்றம் பெற்றன.

ஆனால், முகாமைத்துவம் எனும் எண்ணக் கருவின் தோற்றம் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் விளைவாக உருவாகியது. தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்களின் கருத்துக்கள் பின்வருமாறு காணப்படுகின்றன.

| ஆய்வாளர் | முகாமைத்துவம் | தலைமைத்துவம் |
|---|---|---|
| கொற்றர் (Kotter, 1990) | நிறுவனங்களில் ஒருங்கிணைவை ஏற்படுத்தி நாளாந்தப் பணிகளை கொண்டு நடத்துதல். | நிறுவனத்தில் ஆக்கபூர்வமான மாற்றங்களை ஏற்படுத்தி, சூழலுடன் பொருத்தப்பாடடையச் செய்து, நிறுவனம் முன்னோக்கி நகர்வதற்கான செயற்பாடுகளை ஆழ்ந்த தரிசன நோக்குடன் செயற்படல். |
| பெனிஸ், நானுஸ் (Bennis, Nanus, 1985) | முகாமையாளர் நிறுவன செயற்பாடுகளை சரியாகச் செய்பவர். அதாவது முகாமையாளர்கள் தமது நாளாந்தப் பணிகளை வெற்றிகரமாக பூரணப்படுத்த முயல்கின்றனர். | தலைவர் நிறுவனத்தை மேம்படுத்தக் கூடிய சரியான விடயங்களைச் செய்பவர். அதாவது தலைவர்கள் பணியாளர்களில் செல்வாக்குச் செலுத்தி நிறுவன மாற்றத்துக்கான தரிசன நோக்கினை ஏற்படுத்த முயல்கின்றனர். |
| செல்ஸ்நிக் (Daleznik, 1977) | முகாமையாளர் நிறுவன இலக்குகளை தமது சொந்த இலக்காகக் கருதுவதில்லை. அத்துடன் நிறுவன நோக்கத்தில் போதிய ஆர்வமற்றிருப்பர். அதாவது முகாமையாளர்கள் திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், வழிகாட்டல், கட்டுப்படுத்தல் முதலானவற்றில் ஆர்வமாக இருப்பர். | தலைவர்கள் நிறுவன இலக்குகளை தம்முடைய சொந்த இலக்காகக் கருதுவதோடு சொல்சார்ந்த ஆர்வமான மனப்பாங்கைக் கொண்டிருப்பர். அதாவது தலைவர்கள் பணியாளருடனான ஆரோக்கியமான தொடர்பாடல் , அவர்களை ஊக்குவித்தல், நிறுவன மாற்றம் முதலானவற்றில் ஆர்வமாக இருப்பர். |
| றோஸ்ற் (Rost, 1991) | முகாமைத்துவம் என்பது ஏக திசை கொண்ட அதிகார நிலைப்பட்ட தொடர்பு (Uni-directional authority relationship) அதாவது முகாமையாளர்கள் பணிகளை செய்து முடிப்பதற்காக இணைப்பாக்க நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள். | தலைமைத்துவம் என்பது பல்திசை கொண்ட செல்வாக்கு சார்ந்த தொடர்பு (Multi- directional influence relationship) அதாவது தலைவர்கள் பரஸ்பர தேவைகளின் அடிப்படையில் அனைவரும் ஒன்று சேர்ந்து மாற்றங்களை உருவாக்க வழிப்படுத்துட வர். |

ஒரு நிறுவனம் விளைதிறனுடன் இயங்க வேண்டுமெனில் தலைமைத்துவமும் முகாமைத்துவமும் அவசியமானவை. நிறுவனத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தலைமைத்துவம் அவசியமாவது போல ஒழுங்கு முறையான பெறுபேறுகளைப் பெறுவதற்கு முகாமைத்துவம் அவசியமாகின்றது. முகாமைத்துவம் தலைமைத்துவத்துடன் இணையும் போது ஒழுங்கு முறையான மாற்றங்களை உருவாக்க முடியும்.

### 1. தலைமைத்துவம்

நவீன உலகில் தலைமைத்துவம் சம்பந்தமான எண்ணக்கரு எல்லா வகையான நிறுவனங்களிலும் பிரபலம் பெற்று வருகின்றது.

எந்தவொரு நிறுவனத்தின் இலக்கையும் இலகுவில் அடைந்து கொள்வதற்குத் தலைமைத்துவமே வழிசெய்யும் என்பதால் சகல நிறுவனங்களும் தமக்கான தலைமைத்துவத்தின் மீது அக்கறை கொள்ளத் ஆரம்பித்துவிட்டன. இன்றைய உலகில் கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் போலவும் அவற்றின் அதிபர்கள் முகாமையாளர்கள் போலவும் கல்வி வணிகப் பண்டமாகவும் மாணவர்கள் வாடிக்கையாளர்களாகவும் கருதப்படும் நிலை தோன்றியுள்ளதால் கல்வி நிறுவனங்களின் வெற்றிகரமான இயக்கத்திற்குத் தலைமைத்துவம் இன்றியமையாததாகிவிட்டது.

தற்காலத்தில் உலகமயமாக்கல் ஊடாக கல்வி நிறுவனங்கள் தமது மாணவர்களுக்குத் தரமான கல்வியை உறுதிப்படுத்தத் தரமான உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்ளவும் நவீன கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்தி உயர் தரத்திலான கல்வியை வழங்கவும் முயன்று வருவதனால் அதற்கென நல்ல தலைமைத்துவத்தை வேண்டி நிற்கின்றன.

முன்னர் தலைவர்கள் பிறக்கின்றார்கள் என்ற நிலை மாற்றமடைந்து இப்பொழுது தலைவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள் என்ற கருத்து நிலைபெற்று விட்டதனால் தலைமைத்துவப் பண்புகளைத் தலைவர்களிடையே வளர்ப்பதற்கும் அதனூடாக ஆளுமை மிக்க தலைவர்களை உருவாக்குவதற்கும் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

### 1.1 தலைமைத்துவத்திற்கான வரைவிலக்கணங்கள்

நிறுவனங்களின் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக அதனுடன் தொடர்புபட்டவர்களை வழிநடத்திச் செல்லும் பணியான தலைமைத்துவத்திற்குப் பல அறிஞர்கள் பல வகையான வரைவிலக்கணங்களை வகுத்துள்ளனர். அவற்றுள் முக்கியமானவை சில கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

ஏ) ஸ்புறூட்ஸ் எனும் அறிஞரின் தலைமைத்துவத்திற்கான வரைவிலக்கணம்

*எவரேனும் ஒருவர் ஏனையோருக்கு முன்மாதிரியாக நின்று செயற்படுகின்றாரோ அவரால் மேற்கொள்ளப்படும் கருமம் தலைமைத்துவம்*

பி) மர்வின் இசோ எனும் அறிஞரின் தலைமைத்துவத்திற்கான வரைவிலக்கணம்

*தூய்மையாகவும் சிக்கனமாகவும் செயற்பட்டு தன்னைச் சார்ந்துள்ள மக்கள் கூட்டத்தின் மேல் நேர்க்கணியமாகச் செல்வாக்கைச் செலுத்தக்கூடிய கருமம் எதுவோ அதுவே தலைமைத்துவம்*

சி). எனடானியல கற்ஸ் றோபேட் எனும் அறிஞர்களின் தலைமைத்துவத்திற்கான வரைவிலக்கணம் தலைமைத்துவம் என்பது ஒரு நிலையில் உடைமையாகவும் தனிநபரின் குணவியல்பாகவும் நடத்தையின் கூறாகவும் கொள்ளப்பட முடியும்.

டி) றிச்சாட் கொங்டன், நேர்மன் மைம் எனும் அறிஞர்களின் தலைமைத்துவத்திற்கான வரைவிலக்கணம்

*தலைமைத்துவம் என்பது குழுவினர் மீது செல்வாக்கினைச் செலுத்தி அவர்களூடாக நிறுவனத்தின் பணிகளை நிறைவேற்றும் கருமம்.*

**அ.குகன்**
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

ஈ) கூன்ஸ், ஓடொனல் எனும் அறிஞர்களின் தலைமைத்துவத்திற்கான வரைவிலக் கணம்

*தலைமைத்துவம் என்பது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்குத் தனக்குக் கீழ் இயங்கும் பின்பற்றுவோரை அல்லது உதவியாளர்களை நெறிப்படுத்தும் கருமம்*

### 1.2 தலைமைத்துவ வகைகள்

தலைமைத்துவப் பணியை மேற்கொள்வதற்காக உருவாகும் தலைமைத்துவம் நான்கு வகைப்பட்டனவாக அமையும்.

**ஏ).கொடைத் தலைமைத்துவம்**

பிறப்பிலிருந்தே தலைமைதாங்கும் பண்புகளை உடையது கொடைத் தலைமைத்துவம் ஆகும்.

உதாரணம்: மகாத்மா காந்தி , நெப்போலியன், மாட்டின் லூதர்கிங்

**பி)பாரம்பரியத் தலைமைத்துவம்**

பரம்பரையை மையமாகக் கொண்டு தலைமைதாங்குவது பாரம்பரியத் தலைமைத்துவம் எனப்படும்.

உதாரணம்:- இங்கிலாந்து எலிசபெத் மகாராணி

**சி).தெரிவுத் தலைமைத்துவம்**

தெரிவு செய்யப்பட்டு ஒருவர் பெறும் தலைமைத்துவம் தெரிவுத் தலைமைத்துவம் என அழைக்கப்படும்.

உதாரணம்- தொழிற்சங்கத் தலைவர், அரசியல் தலைவர், சமயத் தலைவர்

**டி) நியமனத் தலைமைத்துவம்**

நியமனம் செய்யப்படுவதனூடாகக் கிடைக்கும் தலைமைத்துவம் நியமனத் தலைமைத்துவம் எனப்படும்.

உதாரணம்:- பல்கலைக்கழகத் துணைவேந்தர், கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி, பாடசாலை அதிபர்.

(தொடரும்).......

## வாரத்திற்கு ஒரு புதிர்! 81

**கட்புல ஒளி ஒரு சொட்டை Quantum எவ்வாறு அழைப்பர்**

விடைகளை 08.04.2013 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**து.பிரதீபன்**
ஆசிரியர், பிரிவு -A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 80 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

செல்வி. சுவர்ணலதா
கெங்காதரன்
கிளி/வட்டக்கச்சி
மகா வித்தியாலயம், வட்டக்கச்சி

### புதிர் 80 இற்கான கேள்வியும் விடையும்:

செயற்கையான முறையில் காய்களை கனியாக்கும் செயற்பாட்டிற்கு (அதன் தோல் பகுதியை மஞ்சள் நிறமாக்குவதற்கு) பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள் எது?

Ethylene

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 81

சரியான விடை:-..........................................................
முழுப்பெயர்:-..........................................................
முகவரி:-..........................................................
தொ.பே. இல:..........................................................
கையொப்பம்:..........................................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாடுகள் சபை பொதுச் செயலாளரை சந்திக்க குழுவொன்றை அமையுங்கள்

## தமிழக முதல்வரிடம் நாம் தமிழர்கட்சி கோரிக்கை

(சென்னை)

**தமிழக சட்டப் பேரவையில் அனைத்துக் கட்சிகளின் பேராதரவோடு நிறைவேற்றப்பட்ட தீர்மானம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருப்புமுனையாகும் என நாம் தமிழர்கட்சி தெரிவித்துள்ளது.இது குறித்து நாம் தமிழர்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,**



தனி தமிழ் ஈழத்தை அமைக்க இலங்கையில் வாழும் தமிழர்களிடமும் புலம்பெயர்ந்து உலக நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் ஒரு பொது வாக்கெடுப்பை ஐ.நா. மன்றம் நடத்திட வேண்டும் என்கிற தீர்மானத்தை தமிழக சட்டப் பேரவையில் முன்மொழிந்து நிறைவேற்றியதற்காக தமிழக முதல்வருக்கு நன்றியையும் பாராட்டுதலையும் நாம் தமிழர் கட்சி தெரிவித்துக் கொள்கிறது.

தமிழக சட்டப்பேரவையில் அனைத்துக் கட்சிகளின் பேராதரவோடு நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருப்பு முனையாகும்.

இது இராஜதந்திர ரீதியிலான ஒரு அழுத்தத்தை இந்திய மத்திய அரசுக்கு ஏற்படுத்துவதோடு மட்டுமன்றி உலக நாடுகளுக்கு விடுக்கப்பட்ட ஒரு அழுத்தமான செய்தியுமாகும்.


இலங்கை அரசு நடத்திய போருக்கு இந்திய மத்திய காங்கிரஸ் அரசு ஆயுதம் அளித்ததையும் பயிற்சி அளித்ததையும் ஆலோசனை வழங்கியதையும் மிக நவீனமாக ரேடார் கருவிகளை வழங்கியதையும் இந்திய இராணுவத்தின் உயர் அதிகாரிகள் இலங்கைக்குச் சென்று உதவியதையும் அழுத்தம் திருத்தமாக முதல்வர் சுட்டிக் காட்டியுள்ளதன் மூலம் ஐ.நா.மனித உரிமை மன்றத்தில் மட்டுமன்றி சர்வதேச அரங்கில் இலங்கை அரசை தனது இராஜதந்திரத்தைப் பயன்படுத்தி காப்பாற்றி வரும் இந்திய மத்திய காங்கிரஸ் அரசின் முகமூடியை கிழித்தெறிந்துள்ளார்.

தமிழினத்தை ஒட்டுமொத்த அழித்தொழிக்கும் திட்டத்துடன் நடத்தப்பட்ட அந்தப் போரில் சிறுபிள்ளைகள், பெண்கள், முதியவர்கள் என்று தங்கள் சொந்தங்களை பல்லாயிரக் கணக்கில் இழந்த நம் ஈழத்து சொந்தங்களுக்கும் நாட்டை விட்டு துரத்தப்பட்டு தமிழ்நாட்டில் அகதிகளாய் வாழ்ந்துவரும் தமிழ் மக்களுக்கும் இத்தீர்மானம் நம்பிக்கையைத் தருவதாகவுள்ளது.

தமிழினத்தின் விடுதலைக்காகவும் உரிமை மீட்பிற்காகவும் உழைத்துவரும்நாம்தமிழர்கட்சிதமிழகமுதல்வருக்கு ஒரு முக்கியமான வேண்டுகோளை விடுவிக்க விரும்புகிறது.

இன்றைய நிலையில் தமிழினத்திற்காக பேசுவதற்கு உலகில் ஒரு நாடு கூட இல்லாத நிலையில் தமிழினத்தின் உணர்வையும் நமது அழுத்தமான கோரிக்கைகளையும் ஐ.நா. அவையின் தலைமை பொதுச் செயலாளர் பான் கீ மூனை சந்தித்துத் தெரிவிக்க தமிழக சட்டமன்றக்குழு ஒன்றை தமிழக அரசு அனுப்ப வேண்டும்.

மேலும் தமிழக அரசு அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்கள் குழுவை ஏன் ஐ.நா.பொதுச்செயலரை சந்திக்க அனுப்பக் கூடாது?



அப்படி ஒரு குழுவை அனுப்பி தமிழினத்தின் உணர்வையும் தமிழக சட்டப் பேரவையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தை ஐ.நா. பொதுச் செயலருக்கு விளக்கிட தமிழக அரசு முன்வர வேண்டும்.

அதுவே இத்தருணத்தில் செய்திட வேண்டிய சரியான பணியாக இருக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கொழும்பு தமிழ் சங்கத்தில் நூற்கண்காட்சியும் விற்பனையும்

கொழும்புத் தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்துள்ள நூற்கண்காட்சி, நூல் விற்பனை, ஓவியக்கண்காட்சி ஆகியன இன்றும்நாளையும்நாளை மறுதினமும் ஆகிய நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை காலை மாலை என இரு அமர்வுகளாக கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசா, தமிழ்ச்சங்க இலக்கியக் குழுச் செயலாளர் மு.தயாபரன், சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய துணைத்தலைவருமான மு. கதிர்காமநாதன், சங்கத்தின் துணைத் தலைவர் கி.இராஜகுலேந்திரா, சங்கத்தின் நூலகக் குழுச் செயலாளர் மா.கணபதிப்பிள்ளை ஆகியோர் குறித்த மூன்று தினங்களிலும் காலையிலும் மாலையிலும் நடைபெறும் நிகழ்வுக்குத் தலைமை தாங்கவுள்ளனர்.

இதில் இன்று வெள்ளிக்கிழமை முதலாம் நாள் நிகழ்வு கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெறும்.இன்றையநாள் நிகழ்வுகள் இரு அமர்வுகளாக நடைபெறும்.

இந்நிகழ்வின்போது கண்காட்சியினை இரத்மலானை இந்துக் கல்லூரி அதிபர் சின்னையா ஜெயக்குமார் திறந்து வைக்கவுள் ளார்.

அத்துடன் மாணவர்களுக்கான வாசிப்பு அறிவுப்போட்டி இடம்பெறவுள்ளது.

மாலை அமர்வு கொழும்பு தமிழ்ச்சங்க இலக்கியக்குழுச் செயலாளர் மு.தயாபரன் தலைமையில் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். இதன்போது பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும். (அ-2)

# கண்ணகி அம்மன் அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய பித்தர் கேணியில் தீர்த்த உற்சவம் நடைபெறும். (அ-2)

# 48 ஆவது ஆண்டு விழாவும் ஈஸ்ரர் கலை நிகழ்வுகளும்

(யாழ்ப்பாணம்)

கிறீன்கிங்ஸ் சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு விழாவும்ஈஸ்ரர் கலைநிகழ்வுகளும்நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை வரை யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள நிலைய முன்றலில் நிலையத் தலைவர் லிகோறி நிர்மலன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஜே/75 சுண்டுக்குளி தெற்கு கிராம அலுவலர் ஞானசேகரம், ஜே/75 சுண்டுக்குளி தெற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. எஸ். ஜெயப்பிரியா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


கௌரவ விருந்தினராக யாழ். மரியன்னை பேராலய பங்குத்தந்தை அருட்பணி ஆர். எச். சகாயநாயகம் அடிகளார் கலந்து கொள்ளவுள்ளார்.

அன்றையதினம் காலை 9.30 மணிக்கு மணமானவர் எதிர் மணமாகாதவர் மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறும். மாலை உதைபந்தாட்டப் போட்டி, கரப்பந்தாட்டப் போட்டி ஆகியவை இடம் பெறும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி காலை 6 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டி நடைபெறும். (அ-2)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## பிறரை மன்னித்த நேரங்களை இயேசுவின் கல்லறை முன் நினைவுபடுத்துவோம்



இயேசு ஒரு குற்றவாளியைப்போல சிலுவையில் அறையப்பட்டு இறந்தார். சிலர் அவரை அரசியல் குற்றவாளியாக, சமயக் கொள்கைகளை மறுத்த துரோகியாகப் பார்த்தார்கள்.

நாட்டிற்கும் சமயத்திற்கும் எதிராகச் செயற்படுவோர் சரியான தண்டனை பெறவேண்டும் எனக் கருதியோர் இயேசுவின் சாவு பற்றி அதிகம் கவலைப் பட்டிருக்கமாட்டார்கள். ஆனால் நாம் இயேசுவின் வேதனையைக் கொஞ்சமாகிலும் உணரமுயல்வோம். உரோமையர்கள் கண்டுபிடித்த சித்திரவதைகளின் கொடுமுடியாக சிகரமானதுதான் சிலுவைமரணம். அன்று சிலுவையில் அறையப்பட்டவர்கள் எளிதில் சாவதில்லை. அணு அணுவாக சித்திரவதைப் பட்டுச் சாவார்கள். கைகளில் அறையப்பட்ட இரு ஆணிகளால் உடல் தாக்கப் பட்டிருப்பதால் உடல் தொங்கிக்கொண்டிருக்கும். அந்த நிலையில் மூச்சுவிட முடியாமல் திணறுவார்கள். மூச்சு விடுவதற்கு உடல் பாரத்தை மேலே கொண்டு வர வேண்டியிருக்கும். அப்படிக்கொண்டு வருவதற்கு ஆணிகளால் அறையப் பட்ட கால்களையும் இரு கைகளையும் அவர்கள் பயன்படுத்த வேண்டியிருந்தது. அப்படி அவர்கள் விடும் ஒவ்வொரு மூச்சுக்கும் மரணவேதனை அனுபவிப்பார்கள்.


ஒருசிலர் இப்படி உயிரோடு போராடி எழுப்பும் மரணஓலம் எருசலேம் நகருக்கும் கேட்கும் என்று வேதாகம ஆராய்ச்சியாளர்கள் சொல்கின்றனர். இந்த மரணஓலத்தை நிறுத்தவே அவர்கள் மூச்சடைத்து விரைவில் இறக்கட்டும் என்பதற்காகவே அவர்கள் மீண்டும் மேலே எழுந்துவர முடியாதபடி அவர்கள் கால்களை முறித்துவிடுவார்கள். இதையே நாம் நற்செய்தியில் வாசிக்கிறோம்.

அப்படிப்பட்ட ஒருவேதனையின் கொடுமுடியிலும் தான்விடும் ஒவ்வொரு மூச்சுக்கும் மரணப்போராட்டம் நிகழ்த்தி வந்த இயேசு சிலுவையில் சொன்னவார்த்தைகளின் முதல் வரிகள் இவை. தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை. தன் இறுதி மூச்சுவரை மன்னிப்பை தன் சுவாசமாக்கியது போல் கோடிக்கணக்கான மக்கள் மன்னிப்பை வாழ்க்கையில் கடைப்பிடித்துள்ளனர். மனித வரலாற்றில் புனிதர்கள் மட்டுமல்ல சாதாரண மனிதர்களும் மன்னிப்பிற்கு அற்புதமான சாட்சி பகர்ந்திருக்கிறார்கள்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

நாம் மன்னிப்பை வழங்கவும் மன்னிப்பைப் பெறவும் ஒவ்வொருவரும் கற்றுக்கொண்டால் இந்த [illegible] நம் வாழ்வில் மன்னிப்பைத் தந்த நேரங்கள், பெற்ற நேரங்கள் அப்போது நாம் [illegible] நிறைவு இவற்றை இயேசுவின் கல்லறை முன்பு நினைவுபடுத்திப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# சிறுவர் அரங்கம்

412



## கழுதைக்கு சவரம்

வெகுகாலத்திற்கு முன் பக்தாத் நகரத்தில் அலி என்னும் அம்பட்டன் ஒருவன் இருந்தான். சவரம் செய்வதில் அவ்னுக்கு இணையாக பக்தாத்தில் யாருமே இல்லை. பக்தாத்திலுள்ள பணக்காரர்களும் பிரமுகர்களும் அவனிடம் தான் சவரம் செய்து கொள்வார்கள்.

ஒருநாள் அலியின் வீட்டில் விறகு இல்லை. யாராவது விறகு கொண்டு வருகிறானா என்று பார்க்கலானான். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு விறகுவெட்டி கழுதையின் மீது விறகு சுமை ஒன்றைப் போட்டுக்கொண்டு வீதிவழியே வந்து கொண்டிருந்தான்.

அவனைக்கூப்பி ட்டு அலி, அப்பா அப்படியே எல்லாவற்றையும் எனக்கு ஐந்து

## அம்புலிமாமா கதைகள்

ரூபாய்க்குக் கொடு என்றான்.

பக்தாத்தில் விறகுக்குச் சற்றுப்பஞ்சமே. ஆயினும் ஐந்து ரூபாய் என்று சொன்னதும் அந்த விறகு வெட்டி அதற்கு சம்மதித்து விறகு சுமையை கீழே இறக்கிவிட்டு பணத்தைக் கேட்டான்.

அலிக்கு ஒரு உபாயம் தோன்றியது. உடனே நான் பேசியது விறகுக்கு மட்டுமல்ல கழுதையின் மீது விறகு வைக்க ஒரு மரத்தொட்டியை வைத்திருக்கிறாயே! அதையும் சேர்த்துத் தான் ஐந்து ரூபாய்க்குப் பேசினேன் என்றான்.

அதற்கு விறகுவெட்டி இதற்கு நான் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்றான். ஆனால் அலி சும்மா இருக்கவில்லை. விறகு வெட்டியின் மரத் தொட்டியையும் விறகையும் பிடுங்கிக் கொண்டு அவனை அடித்து விரட்டிவிட்டான்.



அடி தாளாமல் விறகு வெட்டி அவ்வூர் நீதிபதியிடம் போய் முறையிட்டான். ஆனால் அலி அந்த நீதிபதிக்கு சவரம் செய்பவன். ஆகையால் அந்த முறையீட்டிற்கு அவர் செவி சாய்க்கவில்லை. விறகு வெட்டி உயர் நீதிபதியிடம் போய் முறையிட்டான். ஆனால் அவரும் அலியிடம் சவரம் செய்து கொள்பவர் என்பதால் அவரும் விறகு வெட்டி கூறும் முறையீட்டை இலட்சியம் செய்யவில்லை.


அவன் மனம் நொந்து வருகையில் ஒரு கிழவன் அவனைப் பார்த்து என்னப்பா, என்ன சமாசாரம்? என்று கேட்டான். விறகுவெட்டியும் அலி செய்த அநியாயத்தைக் கூறினான்.

இதற்கா கவலைப்படுகிறாய். நீ போய் நம்முடைய சுல்தானிடம் முறையிடு. அவர் உனக்கு நியாயம் வழங்குவார் என்று சொன்னான் அக்கிழவன். உடனே விறகு வெட்டி அரண்மனைக்குச் சென்று சுல்தானை பேட்டி கண்டான்.

விறகுவெட்டி தன் குறையை சுல்தானிடம் கூறவே சுல்தானும் அலி சொல்வது பொய்! நீ கவலையை விடு! நான் உனக்கு நியாயம் வழங்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி விறகு வெட்டியிடம் ஏதோ இரகசியம் கூறினான். அவனும் மிகவும் சந்தோசமடைந்தவனாய் சுல்தானுக்கு சலாம் செய்துவிட்டு அங்கிருந்து சென்றான்.

சில நாட்களுக்குப் பின்பு விறகுவெட்டி அலியிடம் சென்று என் சிநேகிதனுக்கும் எனக்கும் சவரம் செய்யவேண்டும். எவ்வளவு கேட்கிறாய்? என்று கேட்டான்.

அதற்கு அலி இரண்டு பேருக்குமாக இரண்டு ரூபாய் கொடு என்றான். சரி முதலில் எனக்குச் சவரம் செய். பின் என் நண்பனை அழைத்து வருகிறேன் என்று கூறி விறகு வெட்டி இரண்டு ரூபாய்களைக் கொடுத்து விட்டு முதலில்தான் சவரம் செய்து கொண்டான்.



அலி உடனே எங்கே உன் நண்பன் சீக்கிரம் அழைத்து வா! என்று கூறவே விறகு வெட்டியும் வெளியில் இருக்கிறான். இதோ அழைத்துவருகிறேன் என்றுகூறி தன் கழுதையை உள்ளே அழைத்துக்கொண்டு வந்தான்.

என்ன கழுதைக்கா நான் சவரம் செய்வது? என்று அலி கோபத்தோடு கேட்டு முடியாது இப்போதே நீ இங்கிருந்து போகாவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன் என்று கூறினான். இதைக் கேட்டு விறகு வெட்டி சுல்தானிடம் சென்று இவ்வழக்கை கூறினான்.

உடனே சுல்தானும் அலியைக் கூப்பிட்டு நீ இவனுடைய சிநேகிதனுக்கு சவரம் செய்ய ஒப்புக்கொண்டு பணத்தை வாங்கிக் கொண்டாயா? என்று கேட்டான். அலியும் அதற்கு ஆமாம் என்று கூறியவாறே ஒரு மனிதனின் சிநேகிதன் கழுதையா?கழுதைக்கு எங்காவது சவரம் செய்வதுண்டா? எனச் சுல்தானிடம் கேட்டான்.

அதற்கு சுல்தான் நீ சொன்னது நிஜமே. விறகுடன் விறகு தொட்டியையும் விலை பேசும் விசித்திரம் எங்காவது உண்டா? அந்த விசித்திரம் இருந்தால் கழுதைக்கும் சவரம் செய்யும் பழக்கம் உண்டு.

எனவே நீ கழுதைக்கு சவரம் செய்தேயாக வேண்டும் என்று கூறினான்.

அலி திக்கு முக்காடிப் போனான். அவனால் சரியான பதில் கூறமுடியவில்லை. அலி கழுதைக்கு சவரம் செய்யப்போகிறானென்றதும் ஊரே திரண்டு வந்து விட்டது வேடிக்கை பார்க்க. அலி கழுதைக்கு சவரம் செய்ய அவர்கள் விழுந்து விழுந்து சிரித்தனர். அலி அவமானப்பட்டான்.

சுல்தானும் விறகு வெட்டிக்கு கொஞ்சம் பணத்தை இனாமாகக் கொடுத்து அனுப்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்து செயற்படுதல்

## ஆன்மீகம் 02



பரமஹம்ஸ நித்தியானந்தர்

நீங்கள் பாரபட்சமற்ற, வெறுமையான மனதுடன் உள்ளே வரும் பொழுது, உங்களால் நான் சொல்வதை முழுமையாகக் கிரஹித்துக் கொள்ள முடியும். உங்கள் கல்வியறிவுடன் உள்ளே வரும் பொழுது, நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் அதைப் பற்றி உங்களுக்குத் தெரிந்தவற்றுடனும், அதைப் பற்றி இதற்கு முன்பே வேறு யாரோ ஒருவரிடம் கேட்டவற்றுடனும், தொடர்ந்து ஒப்பிட்டுக்கொண்டு, நான் சொல்ல முயற்சிப்பதைத் தவற விட்டு விடுவீர்கள். உங்களுக்குள் ஒரு சிறிதாவது வெற்றிடம் இருந்தால்தான், நான் சொல்வதை கிரஹித்துக் கொள்ள முடியும். நீங்கள் ஏற்கனவே நிரம்பியிருந்தால், நான் சொல்வதை உள்ளே எடுத்துக் கொள்ள முடியாது.

ஒரு சின்ன கதை...

மேலை நாட்டிலிருந்து ஒரு கற்றறிந்த பேராசிரியர், கீழை நாடான ஜப்பானிலுள்ள ஒரு ஜென் குருவைக் காணச் சென்றார். பேராசிரியர் நிரம்பப் படித்தவர், நிறை ஆராய்ச்சிகள் செய்தவர். அவர் அந்த குருவிடம் ஆன்மீகம் சம்பந்தமான அறிவைப் பெறவும், பல விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடவும் ஆன்மீகம் பற்றி சிறப்பான முறையில் புரிந்து கொள்ளவும் சென்றார். அவர் ஜென் குருவின் இருப்பிடத்திற்கு வந்த பொழுது, குரு தேநீர் தயாரித்துக் கொண்டு இருப்பதைக் கண்டார். பேராசிரியரைக் கண்ட குரு அமரும் படிச் சைகை செய்துவிட்டு தேநீர் வடிப்பதைத் தொடந்தார். பேராசிரியர் அமர்ந்து, சிறிது நேரம் கழித்து, அவரது பின்னணி, கல்வி, கண்டு பிடிப்புகள், உலகப் பயணம், விதவிதமான மக்களைச் சந்தித்த அனுபவங்கள், பலவிதமான விடயங்களில் அவரது முடிவுகள் என்று பல விடயங்களையும் பற்றிப் பேசத் தொடங்கினார்.

குரு தேநீர் வடிப்பதை முடித்து, அவர்களுக்கிடையே இரண்டு கோப்பைகளை வைத்தார். பேராசிரியரின் கோப்பையில் தேநீரை ஊற்றத் தொடங்கினார். அவர் ஊற்ற ஊற்றக் கோப்பை மெதுவாக நிரம்பி வழியத் தொடங்கியது.

தேநீர் தட்டிலிருந்து நிரம்பி வழிந்து மெல்ல மேசையில் ஓடத் தொட்ங்கியது. பேராசிரியரின் மனதில் பெரும் போராட்டம். அதற்கு மேலும் அவரால் தனது பொறுமையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவர், குருவே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? ஊற்றுவதை நிறுத்துங்கள்! கோப்பை நிரம்பி வழிகிறது! என்று அலறினார். குரு நிறுத்திவிட்டு அமைதியாக நீயும் அப்படித்தான் இருக்கிறாய் என்று சொன்னார். பேராசிரியர் அதிர்ச்சியடைந்தாலும் குரு சொல்ல வருவதைப் புரிந்துகொண்டார். பேராசிரியர், இனிமேல் ஏற்றுக் கொள்ள முடியாத தேநீர்க் கோப்பையைப்போல நிறைந்திருந்தார். குரு அவரிடம் எதைச் சொல்லியிருந்தாலும், அது உள்ளே செல்லாமல் வெளியேதான் வழிந்தோடியிருக்கும். குரு சொல்ல வந்ததை, சொல்ல முயற்சித்ததை, பேராசிரியர் அந்த ஒரு வார்த்தையில் புரிந்துகொண்டார்.

அதனால் புரிந்து கொள்ளுங்கள்: நீங்கள் என் அனுபவத்தை விரும்பினால், இங்கு வந்ததனால் உண்மையிலேயே ஏதேனும் லாபமடைய விரும்பினால், இங்கு ஒரு வெறுமையான கோப்பையைப்போல இருங்கள். முழுமையாகத் திறந்தும், ஏற்றுக்கொள்ளும் தன்மையுடனும் இருங்கள். ஒரு குழந்தையைப் போன்று கள்ளம் கபட மற்றும், ஆர்வத்துடனும் பஞ்சுபோல கிரஹித்துக்கொள்ளத் தயாராகவும் இருங்கள். அது போதுமானது.

அறிவு மூன்று வகைப்படும். முதலாவது, புத்தி பூர்வமான அறிவு, மூளையைச் சார்ந்த அறிவு- இதற்கு உங்கள் மூளையைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை. நீங்கள் கொஞ்சம் கவனத்துடனும் கொஞ்சம் நினைவாற்றலுடனும் இருந்தாலே போதுமானது. உங்களால் தர்க்கத்தைப் பயன்படுத்த முடியுமானால் விடயங்களை இணைத்துப் பார்த்துப் புரிந்து கொள்ள கொஞ்சம் பொது அறிவு இருந்தாலே போதுமானது. இந்த வகையான அறிவை நீங்கள் பள்ளியிலிருந்தும், புத்தகங்களிலிருந்தும் பெறுகிறீர்கள். கணிதத்தையும் அறிவியலையும் கற்க உங்கள் மூளையே போதுமானது. நீங்கள் ஒரு சிறந்த கணித மேதையாகவோ அறிவியல் அறிஞராகவோ ஆகிவிட முடியும்.

இரண்டாவது வகையான அறிவு இதயம் சார்ந்தது. இங்கு உங்கள் மூளையுடன் இதயத்தையும் உபயோகப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. கலை, இசை, கவிதை, நாட்டியம் முதலியவை இந்த வகையில் வரும். இவற்றிற்கெல்லாம் மூளையை மட்டும் உபயோகப்படுத்த முடியாது. மூளையை மட்டும் உபயோகப்படுத்தினால் எதுவும் நடக்காது. நீங்கள் உங்கள் இதயத்தையும் உபயோகப் படுத்த வேண்டும். ஓவியம் வரைய, கவிதை எழுத, பாட்டுப் பாட நீங்கள் உணர்ச்சி வசப்பட வேண்டும்.

(தொடரும்)

# பொதுநலவாய உச்சிமாநாடு பங்குபற்றுமா பிரித்தானியா?



...இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் குறிப்பாக கடந்த ஜூனில் வவுனியா தடுப்பு முகாம் ஒன்றில் ஏற்பட்ட கலவரத்தில் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு நடந்த சம்பவங்கள் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பிரித்தானியா மற்றும் இலங்கையில் உள்ள தமிழ், சிங்கள ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விடயங்கள், சமாதானம் மற்றும் நீதிக்கான இலங்கை அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் இடம்பெற்ற இக்கலவரத்தில் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதே.

2009 இல் கைது செய்யப்பட்ட கணேசன் நிமலரூபன் என்பவர் மீது சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டு மூன்று நாட்களின் பின்னர் இதயம் மற்றும் சுவாச நோயாளியாகினார். பின்னர் இவர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோதே மரணமான விடயம் இலங்கை அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறையிலிருக்கும் போது நிமலரூபன் மீது தொடர்ச்சியாக துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இவர் அடிக்கடி வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியேற்பட்டதாகவும் உணவு, நீர் போன்றன வழங்கப்படாது இவரைக் கட்டிவைத்ததாகவும் இவருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டதாகவும் 28 வயதான நிமலரூபனின் குடும்பத்தவர்கள் கூறுகின்றனர்.

வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தின்போது நிமலரூபன் மாரடைப்பால் மரணித்ததாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இலங்கை காவல்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த தனது மகன் தொடர்ந்தும் துன்புறுத்தப்பட்டதன் காரணமாகவே இறக்க வேண்டியேற்பட்டதாக இவரது தாயாரான இராஜேஸ்வரி கூறுகிறார்.

சமாதானம் மற்றும் நீதிக்கான இலங்கை அமைப்பால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இலங்கை அரசாங்கத்தால் முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகளுக்கு வழங்கப்படும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை மிக முக்கியமான ஒன்றாகும். இது இலங்கையில் போரில் ஈடுபட்ட இரு தரப்புகளாலும் மேற்கொள்ளப்பட்ட யுத்த மீறல்கள் தொடர்பாக மட்டுமன்றி இலங்கையில் தற்போதும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் விசாரணைகளின்றி தடுத்து வைக்கும் சம்பவங்கள், மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுகிறது என இந்த அமைப்பின் இயக்குனர் பிறட் காவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா அரசாங்கம் தனது நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் அகதிக் கோரிக்கையாளர்களை மீண்டும் அவர்களது சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இந்நிலையில் இந்த அறிக்கை மிக முக்கிய ஆவணமாக காணப்படுகிறது.

இலங்கை அரசாங்கமானது பல்வேறு விதமான துன்புறுத்தல்கள், படுகொலைகள், வன்புணர்வுகள் மற்றும் கால வரையறையின்றி தடுத்து வைத்தல் போன்ற பாரிய மீறல்களில் ஈடுபடுவது மிகத் தெளிவாக வெளிக்கொணரப்பட்டுள்ள போதிலும் பிரித்தானியா தொடர்ந்தும் இலங்கையர்களுக்கான அரசியல் கோரிக்கையை நிராகரித்து அவர்களை அவர்களது நாட்டுக்கு திருப்பி அனுப்புகிறது என பிறட் காவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நன்றி: இணையம்

கொழும்பில் பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாடு நடத்தப்பட்டால்தான் அதில் கலந்து கொள்ள மாட்டேன் என டேவிட் கமரூன் அறிவிப்பதன் மூலம் தனது தலைமைத்துவ ஆளுமையை உறுதிப் படுத்த வேண்டும் என பிறட் காவர் மேலும் தெரிவித்துள்ளார்.

.................... ............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சமாதானத்தை உறுதிப்படுத்தும் முகமாக கதிர்காமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வருகை தரவுள்ள சமாதான பாத யாத்திரையானது நேற்றையதினம் வவுனியாவை வந்தடைந்தது. அங்கிருந்து கிளிநொச்சி நோக்கி அன்றைய தினம் செல்வதையும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட பலர் பங்கேற்றுக் கொண்டதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பூந்தோட்ட செய்தியாளர்)

# நித்திரையின்மையால் 30 இலட்சம் பேர் பாதிப்பு

இலங்கை சனத்தொகையில் 30 இலட்சம் பேர் நித்திரையின்மை நோய் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மேற்கொள்ளப்பட்ட மருத்துவ ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளதாக ரிச்வே அம்மையார் சிறார் மருத்துவமனையின் பணிப்பாளர் ரட்னசிறி ஹேவகே தெரிவித்துள்ளார்.

இதற்கு இரண்டு காரணங்கள் தாக்கம் செலுத்துவதாக அவர் குறிப்பிட்டார். தூக்கமின்மையால் பாதிக்கப்பட்டவர்கள் ஏதேனுமொரு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. அதேவேளை பகலில் நல்ல தூக்கமோ அல்லது சில நிமிடங்களோ உறங்குபவர்களுக்கு இதய நோய் ஏற்படக் கூடிய தன்மை குறைக்கப்படுகிறது.

உங்களுக்கோ அல்லது உங்கள் பிள்ளைகளுக்கோ நித்திரை வராத தருணத்தில் முதலில் உங்களது மருத்துவரை நாடி அது தொடர்பான விளக்கங்களை அளிக்க வேண்டும்.

நீங்களோ அல்லது உங்கள் பிள்ளையோ உரிய வகையில் நித்திரை கொள்ளாவிட்டால் அது அசாதாரண நிலைமையாக கருத வேண்டும்.

அது தற்போதைய காரணியாக இல்லாது விட்டாலும் பிற்காலத்தில் பிறிதொரு நோயை தோற்றுவிக்கும் ஏதுநிலையாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# தமிழகத்தின் ஆர்ப்பாட்டங்கள் குறித்து இந்தியாவின் நிலை என்ன?

## ஜே. வி. பி. கேள்வி

(கொழும்பு)

தமிழகத்தில் இலங்கைக்கு எதிராக இடம் பெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தியாவுக்கு செல்லும் இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பிலும் இலங்கை அரசாங்கம் தெளிவான விளக்கத்தை வழங்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இந்தியா செல்கின்றவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது இந்திய மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு. அது தமிழக முதல்வரின் பொறுப்பு என்று கூற முடியாது.

தொடர்ச்சியாக தமிழகத்தில் இலங்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதுடன் இலங்கையர்களுக்கு எதிரான தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் இந்த விடயத்தில் இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (அ-2)

# முருகைக்கல் ஜதாராக்களை கடத்த முயன்றவர்கள் கைது

(கொழும்பு)

உயிருடன் அரிய வகையான 24 முருகைக் கல் ஜதாராக்களையும் 2 சிப்பிகளையும் ஏற்றுமதி செய்ய முயற்சித்த சீன பிரஜைகள் மூவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்க பல்லுயிரினப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

முருகைக்கற்களும் சிப்பிகளும் பாதுக்கப்பட வேண்டியுள்ளதால் தாவரங்கள் மற்றும் விலக்கினங்கள் சட்டப்படி இவற்றினை ஏற்றுமதி செய்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முருக்கைக்கல் ஜதாராக்களையும் சிப்பிகளையும் எடுத்துக் கொண்டு சந்தேகநபர்கள் சீனாவின் ஷங்காய்க்கு செல்வதற்கு முயன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மத்தல சர்வதேச விமான நிலையத்தில் பணியாற்றிய இந்த சந்தேக நபர்கள் ஹிக்கடுவையில் முருகைக்கல் ஊரிகளை சேகரித்ததாக கூறியுள்ளனர். இதுதொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.(அ-2)

# யாழ். கல்விக்கோட்டத்தின் தமிழ்த்தின போட்டி முடிபுகள்

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித்திறன் போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**பாவோதல் பிரிவு2**

வைஷ்ணவி துஸ்யந்தன் (வேம்படி மகளிர் கல்லூரி),றெபேக்கா சாள்ஸ் விஜயரட்ணம் (திருக்குடும்பகன்னியர்மடம்), தே.லிண்டா நாவாந்துறை றோ.க வித்தி.

**நடனம் தனி பிரிவு-04**

சௌமிகா டக்ளஸ் (திருக்குடும்பக் கன்னியர் மடம்), பிரவீனா ராகவன் (வேம்படி மகளிர் கல்லூரி), மேரிடனுஷியா றொபேட் கனிஸ்லஸ் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**பேச்சு பிரிவு-03**

அனோஜினி கந்தசாமி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அ.கஸ்ரோ டிறோன் (சென் பற்றிக் கல்லூரி), விதுசன் (சென்ஜோன்ஸ் கல்லூரி).

**நடனம் தனி பிரிவு-02**

பானுஜா குமரகுருபரன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),சங்கவி கமலேஸ்வரன் (வேம்படி மகளிர் கல்லூரி) ,அபிசா அன்ரன் யோய் (திருக்குடும்ப கன்னியர்மடம்).

**பாவோதல்பிரிவு -05**

சோபிகா (சன்மார்க்க மகாவித்தியாலயம்), அன்ரோனேசியா (சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.)

**நடனம் தனி பிரிவு-05**

க.கௌதமன் (யாழ். மத்தியகல்லூரி ), அபிநயா கண்ணதாசன் (வேம்படி மகளிர் கல்லூரி), ஏனோசின் லியோசியஸ் (திருக்குடும்ப கன்னியர் மடம்).

**பாவோதல் பிரிவு- 03**

யதுஷா ரகுநாதன் (வேம்படி மகளிர் கல்லூரி), சாம்பவி மகேஸ்வரன் (திருக்குடும்ப கன்னியர் மடம்),ஜே.மேரி அஜந்தினி (சென் றொக்ஸ் றோ. வித்தியாலயம்)

**பேச்சு பிரிவு -05**

சிந்துஜா இராஜேஸ்வரன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ,ச.டிசாந்தன் (யாழ். மத்திய கல்லூரி), ரமணியா ஜெயக்குமார்( திருக் குடும்ப கன்னியர் மடம்)

**இசையும் அசையும் பிரிவு -01**

கபில்ஜா பேரின்பநாதன் (சென்ஜோன் பொஸ்கோ), சு.கிளமன்ற (சென்றோக்ஸ் றோ.க.வித்தியாலயம்),டெபோறா கனிமொழி தேவ சொரூபன் (சுண்டுக்குளி மகளிர் கல் லூரி)

**இசை தனி பிரிவு -05**

தனுஷியா மார்க்கண்டு (வைத்தீஸ்வராக் கல்லூரி) ,கீர்த்தனா ஆறுமுகதாசன் (வேம்படி மகளிர் கல்லூரி), கலைவாணி சிவஞானசேகரம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**நடனம் குழு 01**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி, நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா.

**பேச்சு**

அன்டியுடிஸ்ரா விஜேந்திரன் (திருக்குடும்ப கன்னியர் மடம்) ,டினோஜா ஜெதைட் ஜொய்சினி(வேம்படி மகளிர் கல்லூரி).

**நடனம் தனி பிரிவு 03**

அபர்ணா சிவரஞ்சன்(வேம்படி மகளிர் கல்லூரி), ம.ஜெனார்த்தன் (யாழ். மத்திய கல்லூரி), வாசுகி அலோன் (திருக்குடும்ப கன்னியர் மடம்.)

**இசை குழு 01**

வேம்படி மகளிர் கல்லூரி, நாவாந்துறை றோ.க வித்தியாலயம், சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

மேடை நாடகம் முதலாமிடம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வில்லுப்பாட்டு முதலாமிடம் கொழும்புத்துறை இந்து மகாவித் தியாலயம், தமிழறிவு வினாவிடை முதலாமிடம் பாசையூர் சென்.அன்ரனிஸ் றோ.க பாடசாலை

**முஸ்லிம் கலாசார நிகழ்ச்சி**

வைத்தீஸ்வரா கல்லூரி , ஒஸ்மானியாக் கல்லூரி.

**பேச்சு பிரிவு- 01**

அபிநயா ரவீந்திரதாசன் (சென்ஜோன் பொஸ்கோ),கோ.சுஞ்சய் யாழ்.மத்திய கல்லூரி), சாம்பவி சுதாகர் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**வாசிப்பு பிரிவு- 01**

மதுமிதா சிவகுமாரன் (சென்ஜோன் பொஸ்கோ), ரா.மாதுளன் (மத்திய கல்லூரி) துயானா தர்மபூபதி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**இசைக்குழு பிரிவு 02**

வேம்படி மகளிர் கல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி ,கொட்டடி நமசிவாயம் மகாவித்தி.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு பிரிவு 01**

ஜெயகாந்தன் கௌசிகன் (சென்ஜோன் பொஸ்கோ),லோஜிதா அண்ணாமலை (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இ.அன்ரன் யுரோசியஸ் (சென்பக்றிக்ஸ் கல்லூரி).

நாட்டார் பாடல் முதலாமிடம் சன்மார்க்க மகாவித்தியாலயம்

**இசை தனி பிரிவு- 03**

ஆதித்தியா அருணகிரிநாதன் (வேம்படி மகளிர் கல்லூரி), க.இசைநிலவன் (சென் ஜோன்ஸ் கல்லூரி),கார்த்திகா ரங்கநாதசர்மா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**இசை தனி பிரிவு 02**

ரபி அன்ரன் (வேம்படி மகளிர் கல்லூரி), யோ. பெஸ்தமிதன் போல் (சென்பக்றிஸ் கல்லூரி) ,சிரோமி கனகராஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**பாவோதல் பிரிவு- 04**

கௌசிகா சுந்தர் (வேம்படி மகளிர் கல்லூரி ), பி.மேரி மரிஸ்றெலா (சென்ஜேம்ஸ் மகளிர் கல்லூரி), சுரேஸ்குமார் லோஜிதன் (வைத்தீஸ்வராக்கல்லூரி).

**பேச்சு பிரிவு- 02**

உ.அனோஜன் (யாழ்.மத்திய கல்லூரி), விதுஷனா சுரேந்திரன் (வேம்படி மகளிர் கல்லூரி), இ.யூட்சல்கி(சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை).

**இசை தனி பிரிவு- 04**

தேவசேனா விஜயகுமார் (வேம்படி மகளிர் கல்லூரி கு.நர்மதா (கொட்டடி நமசிவாய வித்தியாலயம்) ,ஆரபி உமா சங்கர் (சுண்டுக் குளி மகளிர் கல்லூரி.

**பாவோதல் பிரிவு- 01**

சதுர்த்திகா விமலநாதன் (சென்ஜோன் பொஸ்கோ),அன்ரூபல் ஜக்சன் (திருக்குடும்ப கன்னியர் மடம்), நந்தினி சாந்தராசா (கொழும்புத்துறை மகாவித்தியாலயம்).

**வாசிப்பு பிரிவு 02**

ஜீவிதா ராஜரூபன் (திருக்குடும்ப கன்னியர் மடம்), ம.துவாரகன் (கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்) கௌதனிஸ் அன்றூஸ் (சென்பற்றிஸ் கல்லூரி).

**விவாதம்**

யாழ். மத்திய கல்லூரி சென்.பற்றிக்ஸ் கல்லூரி ,திருக்குடும்ப கன்னியர் மடம்.(அ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உற்பத்தி பொருட்களுக்கு இந்தியாவில் அதிக வாய்ப்புக்கள்

(கொழும்பு)

இலங்கைப் பொருட்களை ஏற்றுமதி செய்ய பரந்துபட்ட சந்தை வாய்ப்புக்களை இந்தியா அதிகரித்துள்ளதாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கையின் ஆயத்த ஆடைகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட இறைச்சி ஏற்றுமதி செய்வதற்கே இவ்வாய்ப்பை இந்தியா அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைஅரசாங்கத்தின்வேண்டுகோளிற்கிணங்க 50 இலட்சம் பருத்தி ஆடைகள் வரை இந்தியாவுக்கு தீர்வையின்றி இறக்குமதி செய்யலாம் என்ற கட்டுப்பாட்டை இந்தியா தற்போது 80 இலட்சம் பருத்தி ஆடைகள் வரை அதிகரித்துள்ளதாக இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

இதற்கான அறிவித்தல் முறைப்படி இலங்கை வணிகத் திணைக்களத்தின் தலைமை இயக்குநரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தியத் தூதரகம் கூறியுள்ளது.

இலங்கைக்கு கடந்த ஆண்டு இந்திய வர்த்தக, தொழில் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் ஆனந்த சர்மா சென்ற போது இலங்கை அரசாங்கத்தால் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தெற்காசிய சுதந்திர வணிக உடன்படிக்கையின் அடிப்படையி லால் துணிவகைகளுக்கான தீர்வை கூட இந்தியாவினால் இலங்கை இறக்குமதிகளுக்கு 11 வீதத்தில் இருந்து 5 வீதமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான சுகாதார தரத்தை உறுதி செய்யும் இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரத்தின் காலத்தை இந்தியா 6 மாதங்களில் இருந்து ஒரு வருடமாக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் இலங்கை ஏற்றுமதிகளுக்கு ஒரு பரந்துபட்ட சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலேயே இந்த சலுகைகளை செய்துள்ளதாகவும் இலங்கைக்கான இந்தியத் தூதரகம் கூறியுள்ளது.

இலங்கைக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று தமிழகத்தில் இருந்து ஆளும் அ.தி.மு.க. உட்பட பல தரப்பினரும் கோரிவரும் நிலையில் இந்திய தூதரகம் இவ்வாறு அறிவித்துள்ளது. (அ-2)

# விரைவில் மும்மொழி அடையாள அட்டை

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

மும்மொழி தேசிய அடையாள அட்டையை விரைவில் அறிமுகம் செய்வது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டை வழங்கல் எனது அமைச்சின் கீழ் இல்லை. எனினும் எனது அமைச்சு இதில் பங்களிக்கவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

முன்னர் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் அடையாள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டிருந்தபோதும் தற்போது மும்மொழி அடையாள அட்டை பற்றி ஆலோசிக்கப்படுகின்றது என அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டையின் முன் பக்கத்தில் சிங்களமே காணப்படுகின்றது. இதை மாற்றி மும்மொழி அடையாள அட்டையை வழங்குவதே எமது விருப்பமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இந்த மாற்றத்தை கொண்டு வர ஒரு வருடமாவது எடுக்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஆபிரிக்க நாடுகளுடன் இலங்கை நட்புறவு

(கொழும்பு)

கிழக்கு மற்றும் தெற்கு ஆபிரிக்க நாடுகளுடன் உறவை விரிவுபடுத்தும் செயற்பாடுகளை இலங்கை மேற்கொண்டு வருவதாக வெளியுறவுகள் துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்நாடுகளுடனான சிறந்த உறவை தக்கவைத்துக் கொள்ளும் பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சீசெல்ஸ் சென்றுள்ள அவர் அந்த நாட்டின் ஜனாதிபதியை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இந்து சமுத்திரத்தில் இலங்கை முக்கிய செயற்பாட்டினை வெளிப்படுத்தி வருவதாக சீசெல்ஸ் ஜனாதிபதி தெரிவித்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# சங்கானை கல்விக்கோட்டத்தின் பெருவிளையாட்டு போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையே அண்மையில் பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

மேற்படி போட்டிகளுக்கான முடிவுகளை யா/சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் எஸ்.நோபேட் உதயகுமார் அறிவித்துள்ளார். இதில் முதல் மூன்று இடங்களை பெற்றுக்கொண்ட பாடசாலைகள் விபரம் வருமாறு,

***பெண்கள்***

***கிரிக்கெட்***

யா/விக்டோறியாக் கல்லூரி, யா/வட்டு மத்திய கல்லூரி, யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

***வலைப்பந்து***

***15 வயதுப்பிரிவு***

யா/பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தி, யா/விக்ரோறியாக் கல்லூரி, யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்

***17 வயதுப் பிரிவு***

யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், யா/விக்ரோறியாக் கல்லூரி, யா/வட்டு மத்திய கல்லூரி

***19 வயதுப் பிரிவு***

யா/விக்ரோறியாக் கல்லூரி, யா/வட்டு இந்துக் கல்லூரி, யா/வட்டு மத்திய கல்லூரி

***கரப்பந்து***

***15 வயதுப்பிரிவு***

யா/சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தி, யா/அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை, யா/சங்கானை சிவப்பிரகாசா ம.வி

***17 வயதுப் பிரிவு***

யா/வட்டு இந்துக் கல்லூரி, யா/விக்ரோறியாக் கல்லூரி, யா/சங்கானை சிவப்பிரகாசா ம.வி.

***19 வயதுப் பிரிவு***

யா/சங்கானை சிவப்பிரகாசா ம.வி., யா/வட்டு இந்துக் கல்லூரி, யா/விக்ரோறியாக் கல்லூரி.

***ஆண்கள்***

***கிரிக்கெட்***

யா/விக்ரோறியாக் கல்லூரி, யா/வட்டு இந்துக் கல்லூரி, யா/வட்டு மத்திய கல்லூரி

***கரப்பந்து***

***15 வயதுப் பிரிவு***

யா/விக்ரோறியாக் கல்லூரி, யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், யா/சங்கானை சிவப்பிரகாசா ம.வி.

***17 வயதுப்பிரிவு***

யா/விக்ரோறியாக் கல்லூரி, யா/வட்டு மத்திய கல்லூரி, யா/சங்கானை சிவப்பிரகாசா ம.வி.

***19 வயதுப் பிரிவு***

யா/சங்கானை சிவப்பிரகாசா ம.வி., யா/வட்டு மத்திய கல்லூரி, யா/வட்டு இந்துக் கல்லூரி. (அ-2)




★*1632*-கியூபெக் ஆங்கிலேயரிடம் இருந்து பிரெஞ்சுகளிடம் கை மாறியது.

★*1792*-13 நாட்களின் முன்னால் சுடப்பட்ட சுவீடனின் மூன்றாம் குஷ்தா மன்னன் இறந்தான்.

★*1807*- 4 வெஸ்ரா என்ற இதுவரை அறிந்த மிக வெளிச்சமான சிறுகோளை ஜேர்மனிய வானியியலாளர் ஹைன்ரிக் ஒல்பர்ஸ் கண்டுபிடித்தார்.

★*1831*- துருக்கிக்கு எதிராக பொஸ்னிய எழுச்சி ஆரம்பமாகியது.

★*1849*-பஞ்சாவை ஐக்கிய இராச்சியம் கைப்பற்றியது.

★*1757*- பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனியின் வங்காள இராணுவத்தைச் சேர்ந்த மங்கல் பாண்டே என்ற சிப்பாய் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியை ஆரம்பித்தார். இதுவே பின்னர் இந்திய விடுதலைப் போரு க்கு முன்னோடியாக அமைந்தது.

★*1867*-கனடா கூட்டமைப்பை ஜூலை ஒன்றில் உருவாக்குவதற்கான பிரித்தானிய வடஅமெரிக்க சட்டத்தின் பிரித்தானியாவின் விக்டோரியா மகாராணி அரச ஒப்புதலை அளித்தார்.

★*1879*- ஆங்கிலோ - சூலு போர்: தென்னாபிரிக்காவில் கம்பூலா என்ற இடத்தில் பிரித்தானிய படைகள் 20 ஆயிரம் சூலுக்களை வென்றனர்.

★*1886*-ஜோர்ஜியாவின் அட்லாண்டாவில் ஜோன் பெம்பேட்டன் என்பவர் முதல் தொகுதி கொக்கக்கோலா மென்பானத்தை தயாரித்தார்.

★*1945*- இரண்டாம் உலகப் போர்: வி-1 பறக்கும் குண்டு கடைசித் தடவையாக இங்கிலாந்தைத் தாக்கியது.

★*1971*-மைலாய் படுகொலைகள் அமெரிக்காவில் லெப்டினன் வில்லியம் கலி என்பவன் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை பெற்றான்.

★*1973*-வியட்நாம் போர்: அமெரிக்கப் படைகள் தெற்கு வியட்நாமை விட்டு முற்றாக வெளியேறின.

★*1977*- நாசாவின் மரைனர் 10விண்கலம் புதன்கோளை அண்மித்த முதலாவது விண்கலம் என்ற பெயரைப் பெற்றது.

★*2004*- பல்கேரியா, எஸ்தோனியா , லாத்வியா, லித்துவேனியா, ருமேனியா, சிலவாக்கியா, சிலொவேனியா ஆகிய நேட்டோ அமைப்பில் முழுமையான அங்கத்துவம் பெற்றன.

★*2004*-அயர்லாந்து புகைத்தலை உணவகங்கள் உட்பட எல்லா வேலையிடங்களிலும் தடைசெய்த முதல் நாடானாது.

★*2005*-யாஹூ!: 360° சேவை ஆரம்பிக்கப்பட்டது.

★*2007*- கணிதத்தில் ரோமன் பரிசு எனப்படும் நோர்வே நாட்டின் ஏபல் பரிசு தமிழரான சீனிவாச வரதனுக்கு அறிவிக்கப்பட்டது.

★*2008*- பூமி மணித்தியாலயம் அனைத்துலக மயப்படுத்தப்பட்டது.

**பிறப்புக்கள்**

★*1918*- சாம் வோல்டன், அமெரிக்க விற்பனை நிறுவனங்களான வோல் மார்க்ட், சாம் கிளப்ஸ் நிறுவனர் (இ.*1992*)

★*1927*-ஜோன் வேன், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ.*2004*)

★*1941*-ஜோசெப் டெய்லர், இளையவர் நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

**இறப்புக்கள்**

★*1985*-ஜோர்ச் பீற்றர், மர்டாக் மானிடவியலாளர் (பி.*1897*)

★*2000*-சி.கே. சரஸ்வதி, தமிழ்த்திரைப்பட நடிகை

**சிறப்பு நாள்**

★தாய்வான் இளைஞர் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டனத் தீர்மானமா? கண்துடைப்புத் தீர்மானமா?

**-பழ.நெடுமாறன்-**

தமிழர் பகுதியில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரைத் திரும்பப் பெற வேண்டும், இலங்கை நடத்திய போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும், இப்படி முக்கியமான கோரிக்கைகளை ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை ஜெனீவாவில் கூடிய கூட்டத்தில் 38 பக்கங்கள் கொண்ட அறிக்கையாக முன்வைத்தார்.

இந்தச் செய்தி வெளியானபோது உலகெங்கும் உள்ள தமிழர்களின் உள்ளங்களில் நம்பிக்கை ஒளி



படர்ந்தது.

அந்த அறிக்கையில் வேறு முக்கியமான அம்சங்கள் என்ன இருந்தது தெரியுமா?

இலங்கையில் போர் நடைபெற்ற வேளையில் வயதானவர்களும் சிறுமிகளுமாக ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க எந்த நடவடிக்கையையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை. இந்த நிலையில் போருக்குப் பின்னரும் ஆள் கடத்தல் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்கின்றன.

தமிழர்கள் வசிக்கும் பகுதியில் சிங்கள இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சிவில் நிர்வாகத்திலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றார்கள். இதன் விளைவாக அங்கு வாழும் தமிழ்ப் பெண்களுக்கு பாலியல் வன்முறை அச்சம் நிலவுகிறது.

போருக்குப் பின் செய்ய வேண்டிய நிவாரணப் பணிகள், மீள்குடியமர்த்தல் போன்றவை நிறைவேற்றப்படவில்லை. இலங்கை அரசின் தேசிய செயற்திட்டத்திலும் அவை புறக்கணிக்கப்பட்டுள்ளன. தமிழர்களின் போர் நினைவுச் சின்னங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதாகக் கூறிய இலங்கை அரசு, முழுமையான விசாரணை எதுவும் நடத்தவில்லை. இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்தும் பணிியையும் செவ்வனே செய்யவில்லை. 2006 ஆம் ஆண்டு அதிபர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை இன்னும் வெளியிடவில்லை.

சிறுபான்மையினரான தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும். தமிழர்களின் பகுதியில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரைத் திரும்பப் பெறவேண்டும். இலங்கை நடத்திய போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகத் தன்மை வாய்ந்த சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்கிறது அந்த அறிக்கை.

ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஆலோசனைகளை உள்ளடக்கிய தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்வதற்கு அமெரிக்கா தவறிவிட்டது.

அமெரிக்காவின் வரைவுத் தீர்மானத்தில் ஆணையரால் குறிப்பிடப்பட்ட முக்கியமான ஆலோசனைகள் இடம் பெறவில்லை. நீர்த்துப்போன தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்தது. இதற்கு இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பு இருந்தது.

அமெரிக்கத் தீர்மானத்தின் முக்கிய அம்சங்கள் இதுதான்: இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில் உள்ள இராணுவத்தினரை உடனே அகற்ற வேண்டும். போரின்போது தமிழர்கள் பலர் காணாமல் போனது கவலை அளிக்கிறது.

இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்றும் திட்டம் இலங்கை அரசுக்கு இல்லை. இலங்கைத் தமிழர்களுக்கு வாழ்வாதாரம், நீதி, நல்லிணக்கம் முழுமையாகச் செய்யப்படவில்லை. போர்க்குற்றம் தொடர்பாக இலங்கை அரசே விசாரணை நடத்த வேண்டும்- இவைதான் அமெரிக்கத் தீர்மானத்தின் சாரம்சம்.

உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் சார்பில் இரண்டு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. ஈழத் தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளாகி வருவது குறித்தும் போர்க்குற்றங்கள் குறித்தும் சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என்ற கோரிக்கைகள் முக்கியமாக வலியுறுத்தப்பட்டன.

ஆனால், இந்த இரண்டு கோரிக்கைகளையும் அமெரிக்கத் தீர்மானம் புறந்தள்ளிவிட்டதுடன் அதற்கு எதிராகவும் அமைந்துவிட்டது. அமெரிக்கத் தீர்மானம் போர்க்குற்றங்கள் குறித்த சுதந்திரமான சர்வதேச நீதி விசாரணை என்பதை ஏற்கவில்லை. மாறாக இலங்கையே அது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்கிறது.

இலங்கையின் வடக்கு மாநிலத்தில் சீர்திருத்த நடவடிக்கைகளும் மனித உரிமைகளும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என அமெரிக்கத் தீர்மானம் வலியுறுத்துகிறதே தவிர, கிழக்கு மாநிலத்தைப் பற்றி எதுவும் கூறவில்லை. இதன்மூலம் கிழக்கு மாநிலம் சிங்களவர்களுக்குச் சொந்தமானது என மறைமுகமாக அமெரிக்கத் தீர்மானம் கூறுகிறது.

வடக்கு மாநிலத்தில் மாகாண சபைக்கான தேர்தல் சுயாதீனமாக நடத்தப்பட வேண்டும் என அமெரிக்கத் தீர்மானம் கூறுவது கொடுமையான வேடிக்கை. ஏனெனில், வடக்கு மாநிலத்தில் வாழ்ந்த 5 லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் சொந்த வீடுகளில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு இன்னமும் அகதிகளாக அலைந்து திரிகிறார்கள்.

தமிழர் பகுதிகளில் வேகமாகவும் தங்குதடையில்லாமலும் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. வடக்குப் பகுதி இராணுவமயமாகி விட்டது. இந்தச் சூழ்நிலையில் சுதந்திரமான தேர்தல் எப்படிச் சாத்தியமாகும்? ஒரு போலியான தேர்தலை நடத்துவதற்கு அரசுக்கு அமெரிக்கத் தீர்மானம் உதவுகிறது.

வெற்று வாக்குறுதிகள் நிறைந்த இந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டவற்றை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசுக்கு ஓர் ஆண்டுகால அவகாசத்தை அமெரிக்கத் தீர்மானம் அளித்திருப்பது அவல நகைச்சுவையின் உச்சக் கட்டம்.

கடந்த ஆண்டு நடந்த மனித உரிமைக் குழுக்கூட்டத்தில் இதைப் போல ஓர் ஆண்டுகால அவகாசம் இலங்கை அரசுக்கு அளிக்கப்பட்டபோது எத்தகைய நிவாரண நடவடிக்கைகளும் அங்கு நடைபெறவில்லை.

கடந்த ஆண்டு இலங்கை அரசுக்குக் கொடுக்கப்பட்ட அவகாசத்தில் மேலும் மேலும் தமிழர்களுக்குக் கொடுமைகள் இழைக்கப்பட்டனவே தவிர, நிலைமை சிறிதளவு கூட மாறவில்லை. இப்போது இன்னும் ஓர் ஆண்டுகால அவகாசம் அளிப்பது எஞ்சியுள்ள தமிழர்களை முற்றிலுமாக அழிப்பதற்கே உதவும்.

அமெரிக்கத் தீர்மானத்தை இலங்கை எதிர்ப்புத் தீர்மானம் என அழைப்பது மிகத் தவறானதாகும். உலகக் கண்டனத்தில் இருந்து இலங்கையைக் காப்பாற்றும் தீர்மானமே அது.

அமெரிக்கத் தீர்மானம் குறித்து நடைபெற்ற விவகாரத்தில் இந்தியாவின் பங்கு என்பது சூழ்ச்சிகரமானது. தான் நேரடியாக சம்பந்தப்படாமல் பின்னணியில் இருந்து இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்காவின் தீர்மானத்தை வடிவமைத்தது இந்தியாதான்.

இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசுடன் பேசுவதற்கு வழக்கமாக அனுப்பப்படும் பிரதமரின் ஆலோசகர் சிவசங்கர் மேனன் இம்முறை அனுப்படவில்லை. மாறாக அரசாங்கத்துடனோ காங்கிரஸ் கட்சியுடனோ எந்தவிதத்திலும் சம்பந்தப்படாத சுப்பிரமணியன் சுவாமியை இந்திய அரசு தனது தூதுவராக இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் அனுப்பியது.

அது மட்டுமா? நாடாளுமன்றத்தில் முலாயம்சிங் யாதவ் போன்றவர்கள் இந்திய அரசின் இலங்கைக் கொள்கையைக் கடுமையாக விமர்சனம் செய்தார்கள். ஆனால், இப்போது அவர்கள் மாறிவிட்டனர். இதற்குப் பின்னணி என்ன?

வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் டெல்லியை விட்டு வெளியே செல்ல வேண்டுமானால்கூட, இந்திய அரசின் அனுமதி தேவை. மாநில முதலமைச்சர்களைச் சந்திப்பதற்கும் இந்திய அரசு அனுமதிக்க வேண்டும். ஆக, இந்திய அரசுதான் அவருக்கு இத்தகைய ஆலோசனைகளை வழங்கி, எதிர்க்கட்சித் தலைவர்களையும் முதல்வர்களையும் சந்தித்துப்பேசச் செய்திருக்கிறது.

ஒட்டுமொத்தத் தமிழகத்தின் கடும் எதிர்ப்பும், இதுவரை கூட்டணிக் கட்சியாக இருந்த தி.மு.க. வெளியேறியதும் மத்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுத்தவில்லை. அதைப்போல உதட்டளவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசும் அமெரிக்காவும் இந்தப் பிரச்சினையில் இரட்டை வேடம் போடுகிறது.

அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் நிலைப்பாடு என்பது ஈழத் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தி இலங்கை அரசை மிரட்டி சீனாவிட்மிருந்து பிரிக்க நினைக்கிறது. இலங்கையிலும், குறிப்பாக இந்துமாகடலிலும் சீனாவின் ஆதிக்கம் ஏற்படுவது தன்னுடைய உலகளாவிய நலன்களுக்கு எதிரானது என அமெரிக்கா கருதுகிறது.

இந்தியாவும் தனது தென்னாசிய நலன்களைப் பொறுத்தவரையில் சீனாவின் தலையீட்டை விரும்பவில்லை. எனவே, அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தி இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுத்து, சீனாவின் பிடியிலிருந்து அவரை மீட்பது ஒன்றே அவர்களது நோக்கம்.

ஏனெனில் அமெரிக்காவின் இந்து மாகடலின் நலன்களும் இந்தியாவின் பிராந்திய அரசியல் பொருளாதார நலன்களும் முக்கியமே தவிர, ஈழத் தமிழர்களின் வாழ்வு அவர்களுக்கு முக்கியமல்ல.


ஈழத்தில் நடக்கும் இனப்படுகொலை, போர்க்குற்றம், மனித உரிமை மீறல் ஆகியவை குறித்து எவ்வளவோ உண்மைகளை வெளிப்படுத்தியும்கூட, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் தங்களின் அரசியல், பொருளாதார நலன்களை மட்டுமே மனதில் கொண்டு ஈழத் தமிழர்களைக் காவு கொடுக்கத் துணிந்துவிட்டன என்பதைத்தான் அமெரிக்கத் தீர்மானம் எடுத்துக்காட்டுகிறது.

எனவே, இது கண்டனத் தீர்மானம் அல்ல... கண்துடைப்புத் தீர்மானம்!

-ஜூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடிக்கையாளர்களின் கோரிக்கைக்கு அடிபணிந்தது மைக்ரோசொப்ட்




தன் வாடிக்கையாளர்களின் அடங்காத கோபத்தினைப் பார்த்த பின்னர், மைக்ரோசொப்ட் தன் கொள்கையை அண்மையில் மாற்றிக் கொண்டது. ஒபீஸ் 2013 தொகுப்பினை வாங்கியவர்கள், ஒரே ஒரு கணனியில் மட்டுமே அதனை பதிவேற்றம் செய்திட முடியும். அந்தக் குறிப்பிட்ட கணனி இயக்க முடியாத நிலைக்குப் பழுதாகிப் போனால், ஒபீஸ் தொகுப்பினை வேறு ஒரு கணனியில் நீங்கள் பதிவேற்றம் செய்திட முடியாது.

மைக்ரோசொப்ட் இத்தகைய ஒரு திட்டத்தினை அறிவிக்க, அதன் வர்த்தக ரீதியான காரணம் ஒன்று இருந்தது. ஒபீஸ் தொகுப்பினை சந்தா (subscription) கட்டியும் பயன்படுத்தலாம். இந்த வகையில் ஆண்டு ஒன்றுக்கு 99 டொலர் செலுத்தினால் போதும். ஒபீஸ் 2013 தொகுப்பு, அது தரும் வசதிகளுக்கேற்ப, 140 டொலர் முதல் 400 டொலர் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. எனவே, தனக்கு அதிக இலாபம் கிடைக்கும் வகையில், மொத்தமாகச் செலுத்தி வாங்குபவர்கள், சந்தா கட்டிப் பயன்படுத்தும் வழக்கத்திற்கு மாற வேண்டும் என மைக்ரோசொப்ட் இத்தகைய விதியை ஏற்படுத்தியது.

ஆனால், எம்.எஸ். ஒபீஸ் உரிமம், ஒரு கணனிக்கு மட்டுமே செல்லுபடியாகும் என மைக்ரோசொப்ட் அறிவித்தது வாடிக்கையாளர்களை கோபம் கொள்ளச் செய்தது. பல நாடுகளிலிருந்து கண்டனக் கணைகள் பறந்தன. இந்த எதிர்பாராத கோபத்தினைப் பார்த்ததும், மைக்ரோசொப்ட் தன் கொள்கை முடிவினை மாற்றிக் கொண்டது. அண்மையில் அறிவிக்கப்பட்ட முடிவின்படி, ஒரு கணனிக்கு வாங்கப்பட்ட உரிமத்தினை, இன்னொருவரின் சம்மதத்துடன் அவரின் கணனிக்கு மாற்றிக் கொள்ளலாம். ஆனால், ஒரு நேரத்தில், ஒரு கண்னியில் மட்டுமே பயன்படுத்த முடியும். உங்களின் கணனி இயங்க மறுத்தாலோ, அல்லது நீங்கள் புதிய கணனிக்கு மாறினாலோ, இந்த சலுகை வழங்கப்படுகிறது. இதுவும் 90 நாட்களுக்கு ஒருமுறை மட்டும்தான் அனுமதிக்கப்படும். ஆனால், வன்பொருள் பிரச்சினையினால், மாறுதல் வேண்டி இருந்தால், இந்த 90 நாள் காலவரையறை தளர்த்தப்படும். இது உடனடியாக அமுலுக்கு வந்துள்ளதாக, மைக்ரோசொப்ட் அறிவித்துள்ளது. வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த முடிவினை எடுத்துள்ளதாக மைக்ரோசொப்ட் அறிவித்துள்ளது.

# அதி நவீன வசதிகளுடன் Fujifilm கமரா

புகைப்படக் கருவிகளை உற்பத்தி செய்வதில் உலகின் முன்னணி நிறுவனமாகத் திகழும் ஜப்பான் நிறுவனமான Fujifilm ஆனது தற்போது அதிநவீன வசதிகளை உள்ளடக்கியதாக புத்தம் புதிய கமரா ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

FinePix XP200 என்ற தொடரிலக்கத்துடன் அறிமுகமாகும் இந்த கமராக்கள் நீரிற்கு அடியில் 50 அடிகள் ஆழத்திலும் பயன்படுத்தக்கூடியவாறு காணப்படுவதுடன் -10 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையிலும் இயங்கக் கூடியதாகக் காணப்படுகின்றது.

மேலும் வயர்லெஸ் தொழில்நுட்பத்தினைக் கொண்டுள்ள இக்கமெராவானது 16 மெகாபிக்சல்களை உடையதாகவும், வீடியோப் பதிவானது செக்கனுக்கு 60 பிரேம்களாகவும் அமைந்துள்ளது.

இதன் பெறுமதியானது 300 அமெரிக்க டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





யாகூ நிறுவனம் லண்டனைச் சேர்ந்த சும்லி என்ற 17 வயதேயான சிறுவனுடைய நிறுவனத்தை விலைக்கு வாங்கியுள்ளது. இந்த சிறுவன், சிறிய வடிவிலான திரையுடைய ஸ்மார்ட்போன்கள் வழியாக படிக்கவல்ல ஒரு மொபைல் அப்ளிகேஷனை வடிவமைக்கும் நிறுவனம் நடத்தியுள்ளான். இந்த நிறுவனத்தை ஆரம்பிக்கும்பொழுது சிறுவனுக்கு வயது வெறும் 15 தானாம்! அதைத்தான் வாங்கியுள்ளது யாகூ!!

சில மாதங்களுக்கு முன்னர் யாகூவின் CEOவாகப் பொறுப்பேற்ற மரிசா மேயரின் கட்டளைப்படியே இந்நிறுவனம் வாங்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எவ்வளவு விலைகொடுத்து வாங்கப்பட்டது என்பதுபோன்ற விபரங்கள் தெரியவில்லை. ஆனால் அந்நிறுவனத்தின் உரிமையாளரான சும்லி என்ற 17 வயது சிறுவனுக்கு லண்டன் யாகூ அலுவலகத்தில் பணிநியமனம் வழங்கியுள்ளது யாகூ!

# 17 வயதுச் சிறுவனின் நிறுவனத்தை விலைக்கு வாங்கிய யாகூ





# புதிய இரத்தப் பரிசோதனைக் கருவி

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஒரு புது வகை இரத்த பரிசோதனை கருவியை கண்டுபிடித்துள்ளனர். 14 மில்லிமீற்றர் அளவே இருக்கும் இந்தக் கருவி, ஊசியின் மூலம் மனிதனின் தோல் பகுதிக்கும் சதைக்கும் இடையே சொருகப்படும். இந்தக் கருவியினை அடிவயிற்றுப் பகுதி, கால்கள், கைகள் ஆகிய இடங்களில் பொருத்தலாம்.

இந்த கருவி உடலுக்குள் இருந்த வண்ணம், இரத்தத்தில் கொழுப்பின் அளவு, குளுகோசின் அளவு உள்ளிட்ட ஐந்து விதமான சோதனைகளை ஒரே நேரத்தில் மேற்கொள்ளும். இதன் அளவீடுகள், மருத்துவரின் செல்போனுக்கு புளுடூத் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

இந்தக் கருவியை உடலுக்குள் பல மாதங்களுக்கு வைத்திருக்க முடியும். இந்தக் கருவி நாட்பட்ட நோய்களால் பதிக்கப்பட்டவர்களை தொடர்ந்து கண்காணிக்க மிகவும் உதவியாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இந்தக் கருவிகள் இன்னும் நான்கு வருடங்களில் விற்பனைக்கு வரும் என்று கூறப்படுகிறது.

# கைப்பேசிகளுக்கான புதிய Processor அறிமுகம்







தற்போது கைப்பேசிகளில் பயன்படுத்தப்பட்டுவரும் Processor களை விடவும் அதிக வினைத்திறன் கொண்ட Processorfis Qualcomm நிறுவனம் அறிமுகப்படுத்துகின்றது.

இவை Snapdragon 200, Snapdragon 400 இரண்டு வகையாக தயார் செய்யப்பட்டுள்ளதுடன் முதலில் Snapdragon 400 அறிமுகப்படுத்தப்படும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஸ்மார்ட் கைப்பேசிகளில் பயன்படுத்தப்படவுள்ள Snapdragon 400 Processor ஆனது 1.2GHz வேகம் கொண்ட Dual Core Processor ஐயும் அதி உயர் கிராபிக்ஸ் திறன் [illegible] என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றியமைக்கு நன்றி!

## ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் அமெரிக்கா வெற்றிகரமாக நிறைவேற்றிய தீர்மானத்துக்கு நன்றி சொல்லும் அதேவேளை பல முக்கிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியும் இருக்கின்றது என தமிழர்களுக்கான ஒபாமா அமைப்பு தெரிவித்துள்ளது.**

தமிழர்களுக்கான ஒபாமா அமைப்பானது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிற்கும் அமெரிக்கா இராஜாங்க அமைச்சின் தொடர் முயற்சியாலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச்சபையில் இலங்கைக்கு எதிராக தீர்மானத்தைக் கொண்டு வந்து வெற்றிகரமாக நிறைவேற்றியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றார்கள். ஆனால் போர்க் குற்றவாளியான இல ங்கை ஜனாதிபதி தன் நாட்டு மீதான போர்க் குற்றச்சாட்டினை விசாரிக்க வேண்டும் என்று தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டதுதான் தவறான விடயமாகி விட்டது.

கடந்த ஆண்டு ஜெனீவாவில் கொண்டுவந்த தீர்மானத்தினை ஒத்ததாகவே இத்தீர்மானமும் இருந்ததாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

உலக சமூகம் பொதுவாக மனித உரிமை மீறல்களையும் மனித உரிமைகளை மீறுபவர்களையும் பற்றி வெறும் குரல் மட்டுமே கொடுப்பார்கள். ஆனால் செயலாற்றுதல் அல்லது நடவடிக்கை எடுக்கும் விடயத்தில் தயக்கம் காட்டுவார்கள்.

ஆனால் அமெரிக்கா இத்தீர்மானத்தை கொண்டுவந்து உலக நாடுகள் பலதும் அதற்கு ஆதரவாக முடிவெடுத்து தீர்மானம் வெற்றியடைய வைத்தமை பாராட்டுக்குரியதாகும்.

ஆசிய நாடுகளில் கொரியாவை தீர்மானத்திற்கு ஆதரவாகவும் இலங்கைக்கு ஆதரவான நாடான ஜப்பானை தீர்மானத்தில் நடுநிலை வகிக்கும் நிலைப்பாட்டை எடுக்க வைத்தமையும் அமெரிக்கா நினைத்தால் எதனையும் சாதித்து முடிக்கும் என்பதற்கு உதாரணமாகும்.

அமெரிக்காவின் இம் முயற்சிகளினால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை இன்று சர்வதேச மயமாக்கப்பட்டுள்ளது.

இது எதிர்காலத்தில் தமிழர் விடிவிற்கு மிகவும் முக்கியமானதாக அமையப்போ கிறது. குறிப்பாக ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் ஆலோசனையானது சர்வதேச விசாரணை என்றும் பொறிமுறையைச் சேர்ந்துள்ளதும் முக்கியமான விடய மாகின்றது.

மேலும் இலங்கை அரசாங்கமே தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்ற விசாரணையை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டமையானது கவலை தரும் விடயமாகும். அத்துடன் குற்றவாளிகளே குற்றத்தை விசாரிக்கட்டும் என அழைப்பது முட்டாள்தனமாக காணப்படுகின்றது.

இது எமக்கு ஏமாற்றத்தினைக் கொடுத்துள்ளது. இலங்கையில் மேலும் கால அவகாசம் கொடுப்பதானது அவர்கள் மேலும் குற்றம் புரிய அவகாசம் கொடுப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்து விடும்.

மேலும் சர்வதேச விசாரணை தவிர வேறு ஒன்றும் பிரச்சினைக்கு தீர்வாக இருந்து விடப் போவதில்லை என்றும் ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# பேரியல் அஷ்ரப்பை பணி நீக்க வேண்டும்

## பொதுபலசேனா கோரிக்கை

சிங்கப்பூருக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பேரியல் அஷ்ரப்பை பணி நீக்குமாறு பொதுபலசேனா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பேரியல் அஷ்ரப் பௌத்த மதத்திற்கும் சிங்கள மதத்திற்கும் இழிவு ஏற்படும் வகையில் செயற்பட்டு வருவதாக அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட்ட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கை உயர்ஸ்தானிகர் என்ற வகையில் ஆற்றப்பட வேண்டிய கடமைகளையும் பொறுப்புக்களையும் பேரியல் அஷ்ரப் உரிய முறையில் ஆற்றத் தவறியுள்ளார்.

சிங்கப்பூரில் அண்மையில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வுகளின் போது சிங்கள எங்கள் நாடு மற்றும் எனது தேசம்- எனது இனம் ஆகிய பாடல்களை ஒளிபரப்புச் செய்ய பேரியல் அஷ்ரப் அனுமதிக்கவில்லை. சிங்கள, தமிழ் புத்தாண்டை இலங்கை புத்தாண்டு எனப் பெயரிடவும் பொசன் மற்றும் வெசாக் பௌர்ணமி தினங்களில் பௌத்த கொடிகளை ஏற்றக்கூடாது எனவும் பேரியல் கோரியுள்ளதாக தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டுக்கு களங்கம் ஏற்படும் வகையில் செயற்படுவோரை வெளிநாட்டு உயர்ஸ்தானிகராக நியமிக்கக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நான்கு அரசியல் கட்சிகள் இரத்து செய்யப்பட்டன

## தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட நான்கு அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டவை என நிரூபிக்கப்படாததால் அவை இரத்து செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, தேசிய ஒற்றுமை முன்னணி, விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய மாற்று முன்னணி ஆகிய கட்சிகளே இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மாடு, கேட், புலி, புறா என்பன இக்கட்சிகளின் சின்னமாக விளங்கியதென தேர்தல் கள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

கடந்த ஜனவரி 21 ஆம் திகதி தொடக்கம் ஐக்கிய தேசிய மாற்று முன்னணியும் ஜனவரி 31 ஆம்திகதி தொடக்கம் ஏனைய கட்சிகளும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# உருத்திரபுரீஸ்வரன் ஆலயத்திற்கு மின்சாரம் கிடைப்பது எப்போது?

பழைமைவாய்ந்த ஈச்சரங்களில் ஒன்றான உருத்திரபுரீஸ்வரம் ஆலயத்திற்கு இன்னமும் மின்சார வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படாதுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தொன்மையும் பெருமை யும் வாய்ந்த இவ்வாலயத்திற்கு மின்சாரம் வழங்கப்படாமை காரணமாக பின்தங்கிய நிலையில் இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த ஆலயத்திற்கென மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதன்மூலம் உருத்திரபுரம் மேற்கு, சிவநகர், உருத்திரபுரம் வடக்கின் ஒரு பகுதி ஆகிய கிராமங்களுக்கும் மின்சார வசதிகள் ஏற்பட வாய்ப்பாக அமையும் எனவும் தெரிவிக்கின்றனர்.

தற்காலத்தில் அநேகமான கல்வி கற்கின்ற மாணவர்கள் கணனி மற்றும் வலையமைப்புக்கள் மூலமாக தமது கல்வியில் மேன்மை நிலையை அடைந்து வருகின்றனர்.

மிகப் பழைய குடியேற்ற கிராமங்களில் இருக்கும் மாணவர்கள் மின்சார வசதி இல்லாமை காரணமாக கல்வியில் சிறந்தவர்களாக இருந்தும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றனர்.

இந்த மின்சார வசதி தொடர்பாக கிளிநொச்சி மின்பொறியியலாளர் கூறுகையில்,

வடக்கின் வசந்தம் மூலமாகவே புதிய மின் கம்பங்கள் இடுதல் தொடக்கம் மின்சார வசதிக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளல் வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மின்கம்பங்கள் போடப்பட்ட இடங்களுக்கு மின் இணைப்புக்களை வழங்குவதை மட்டுமே எம்மால் செய்ய முடியும் என்றார். இப்பகு திகளுக்கும் வடக்கின் வசந்தத்தின் மூலம் மின்சாரம் கிடைக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். (அ-3-254)

# கச்சதீவின் அதிகாரத்தை இலங்கைக்கு வழங்கிய போது நானும் எதிர்த்தேன்

## கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

கச்சதீவின் அதிகாரம் இலங்கைக்கு வழங்கப்பட்ட போது தாமும் அதனை எதிர்த்ததாக திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் கருணாநிதி தீர்க்கமாக செயற்படவில்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் குற்றம் சுமத்தி இருந்தார்.

இதற்கு பதில் வழங்கும் வகையிலேயே கருணாநிதி இதனைத் தெரிவித்துள்ளார்.

1975 ஆம் ஆண்டு தாம் இந்த விடயத்தில் எதிர்ப்பை வெளிப்படுத்திய போதும் மத்திய அரசாங்கம் அதனை பொருட்படுத்தவில்லை என்று கருணாநிதி தெரிவித்துள்ளார்.

கச்சதீவு விடயத்தில் ஜெயலலிதாவை போலவே தாமும் எதிர்ப்பை வெளிக்காட்டிய தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் மத்திய அரசாங்கம் இதனை பொருட்படுத்தாது அவசரமாக இந்த தீர்மானத்தை அறிவித்ததாக அவர் கூறி யுள்ளார். (அ-2)

# சுதந்திர ஆசிரியர் சங்க செயற்குழு

இலங்கை சுதந்திர ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் இவ்வாண்டுக்கான செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு கடந்த 26 ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தலைவராக த.சத்தியசீலன், உப தலைவராக நா.கண்ணதாசன், செயலாளராக யூட் மரியரட்ணம், உப செயலாளராக எஸ்.சுகந்தன், பொருளாளராக ச.பத்மராஜா, ஊடக இணைப்பாளராக பி.ஆதவன் ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக உறுப்பினர்களாக திருமதி நாகராஜ் கௌசிகா, ர.சுமித்திரா, நாஹகரிகரன் செ.உதயகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-2)



கிளிநொச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் விழாவின் போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருநெல்வேலி அருள்மிகு
# வெள்ளைப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம்
## 29.03.2013 - வெள்ளிக்கிழமை

### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



விநாயக அடியார்களே!

திருநெல்வேலிப் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் 'வெள்ளைப் பிள்ளையார்' என அழைக்கப்படும் விநாயகப் பெருமானுக்கு இராஜ கோபுரத்தோடு கூடிய புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தில் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவதை நிதர்சனப்படுத்தும் பொருட்டு மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்வடைகின்றோம். நீண்ட பழைமையான சிறப்புக்களைக் கொண்ட பல ஆலயங்களை தன்னகத்தே கொண்ட திருநெல்வேலியில் ஈழத்துப் பெண் சித்தர் எனப் போற்றப்பட்ட 'சடையம்மா' எனும் சித்தர் வாழ்ந்த இவ்வாலயம் பல சிந்தனையாளர்களை கொண்டது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் அபிஷேகம் கும்பாபிஷேகம். இதனை செய்விப்பதும், நிதர்சிப்பதும் இப் பிறவியின் புண்ணிய பேறாகும். இதனை நெறிப்படுத்தி நிற்கும் ஆலய பரிபாலன சபையினரை வாழ்த்திப் பாராட்டுகின்றோம். இன்று வெளிவரும் மலர் அனைவரது ஆன்மீக சிந்தனைக்கு வழிகாட்டும் இம் மலர் ஆசிரியரையும் ஊர்மக்களையும் வாழ்த்துகின்றோம். அனைவரும் கும்பாபிஷேகத்தை தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

"என்றும் வேண்டுஞ் இன்ப அன்பு"
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹாசந்நிதானம்.

### கும்பாபிஷேக பிரதம குருவின் அருளாசிகள்



அம்பிகா கிருதயாநந்தம் மாதிரு பரிபாலிதம்
பத்மப்பிரியம் மனோன்மத்யம் வந்தேகம்
கணநாயகம்

சகல ஜீவாத்மாக்களும் தத்தமது வினைப்பயனுக்கு ஏற்றவாறு இறைவனுடைய அனுக்கிரகத்தினால் வீடு பேற்றை அடைகிறது. எங்கும் வியாபித்திருக்கும் இறைசக்தியை குருவானவர் மந்திர சக்தியினால் கும்பத்திலே ஆவாகித்து மேலும் ஜெபம் ஹோமங்களினால் அவ் இறை சக்தியை மெருகூட்டி உருவமாக இருக்கின்ற மூர்த்தியில் அச்சக்தியை சேர்ப்பிக்கும் முகமாக அப்புனித நீரை மூர்த்தியின் மேல் அபிஷேகம் செய்து சாந்நித்தியம் பெற செய்வதே கும்பாபிஷேகம் ஆகும்.

பல மேன்மைகளை உடைய விநாயகப் பெருமானின் அவ்வாலயம் புதுப்பொலிவுற்று குடமுழுக்கு நடைபெறுவதையிட்டு மனமகிழ்ந்து உங்களுக்கு எல்லாம் இறைவனுடைய அனுக்கிரகமும் என்னுடைய ஆசிகளும் சகல சௌபாக்கியமும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

"சமஸ்த கல்யாண சமாஸ்திஅஸ்து"
கிரியா பூக்ஷணம் பிரம்மஸ்ரீ.சு.முரளீதரக் குருக்கள்
பிரதம குரு, அரியாலை நீர்நொச்சித் தாழ்வு,
ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம

### ஆலய குருவின் ஆசிச் செய்தி



திருநெல்வேலியம்பதியில் இருந்து அருளாட்சி புரிகின்ற வெள்ளைப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகத்திற்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு அகமகிழ்கின்றேன்.

அற்புதமாக, ஆனந்தமயமாக எந்த மயமும் ஜங்கரன் மயமாகக் காட்சியளிக்கின்ற அந்த வெள்ளை விநாயகன் கேட்பவற்றை எல்லாம் சுரக்கின்ற "கற்பக தரு" போல நல்வரங்களை எல்லாம் தன் அடியார்களுக்கு வழங்கி அருளாட்சி புரிகின்றார். ஆரம்ப காலத்தில் தம்பிஜயாக் குருக்களினால் அர்ச்சிக்கப்பட்ட இவ் ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று உயர் நிலை பெற்று விளங்குகின்றது. இத்தகைய சிறப்புக்களுடைய இவ் ஆலயம் மேலும் சிறப்புற்று எல்லோரும் இன்புற்று வாழ வெள்ளை விநாயகனின் பாதங்களைப் பணிவோமாக.

சிவத்திரு ந.மதியழகன், ஆலய பிரதமகுரு.

### ஆறுதிருமுருகனின் வாழ்த்துச்செய்தி



திருநெல்வேலி செங்குந்த வீதி வெள்ளைப் பிள்ளையார் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகின்றேன். திருக்கோவில்களைப் புனிதமாகப்பேணி, எம் சமூகத்தை ஆற்றுப்படுத்த வேண்டிய கடப்பாடு ஆலய அறங்காவலருக்குரிய முக்கிய கடமையாகும். திருக்கோவில்களில் கூட்டுப் பிரார்த்தனை, சமயச் சிந்தனைகளை எடுத்துரைப்பது மிகவும் அவசியம். சைவமக்களிடையே சமய அறிவை வளர்க்க வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. அற்புதமும் திருவருளும் நிறைந்த வெள்ளைப் பிள்ளையார் கோவில் முன்மாதிரியான கோவிலாக விளங்க வேண்டிப் பிரார்த்தித்து அனைவருக்கும் நல்வாழ்த்துக் கூறி அமைகின்றேன்.

கலாநிதி. ஆறு. திருமுருகன், தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

### வெள்ளைப்பிள்ளையார் வரலாறு

சிவபூமியின் வடபால் யாழ்ப்பாண நன்னகரருகே நல்லூர் இராஜதானிச் சூழலில் சீர்மிகு கல்விச்சாலைகளையும், அறநிலையங்களையும், மண்டபங்களையும், தர்மஸ்தாபனங் களையும், வைத்தியசாலைகளையும் கொண்டு விளங்கும் கீழைத் திருநெல்வேலியம் பதியில், செங்குந்த வீதியில் எழுந்தருளிய "வேழ முகத்து விநாயகனை தொழ வாழ்வு மிகுந்து வரும் வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ துள்ளி ஓடும் வினைகளே" என அருள் புரிபவனே வெள்ளைப்பிள்ளையார் ஆவார்.

ஆலயமானது மூர்த்தி விசேடமுடையது. நாடி வரும் அடியவர்களின் வினைகளை எல்லாம் வேரோடகற்றி நம்பிக்கையோடு அவன் தும்பிக்கையை பிடிப்பவர்களுக்கு காரியம் எல்லாம் சித்திக்கச் செய்து திருவாக்கும் செய்கருமமும் கைகூடும். பிள்ளையாரை வணங்கி எக்கருமமும் துணிந்தால் நிட்சயம் வெற்றியளிக்கும். இத்தகைய வெள்ளைப்பிள்ளையார் எப்படி இங்கே எழுந்தருளினார்? யாரால் ஸ்தாபிக்கப்பட்டார் என்பதற்கு மூலவிக்கிரகமாகிய உருவ வடிவில் அமைந்த விநாயகனுக்கு அருகே வைத்து வழிபடப்படும் அருவுருவ வடிவாகிய விநாயகனையே ஆரம்பத்தில் வைத்து வழிபட்டு வந்தனர் எனவும் நூற்றாண்டு காலத்திற்கு முன் இவ் ஆலய அயலைச் சேர்ந்த அடியவரொருவர் நல்லூர் இராஜதானிப் பகுதியில் பெற்று வந்து மூலஸ்தானத்தில் வைத்து வழிபட்டு வந்தார். வெள்ளத்துள் கிடந்தபடியால் அல்லது வெள்ளைக்கல்லினால் ஆனமையால் இப்பெயர் வந்திருக்கலாம். அருவுருவ வடிவமுடைய விநாயகர் உருவினையும் லிங்கத்தையும் ஒருங்கே பிரதிஷ்டை செய்துள்ளதும் அபூர்வமே இது இத்தலத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும்.

ஆகம முறை சாராத ஒரு மடாலயம் ஆகும். இதற்குரிய மாண்புகள் சொல்லில் அடங்காதவை. ஆதியில் இலந்தை மர அடியில் வைத்து சிறுகுடிசை அமைத்து நான்கு கிடுகுகளினால் வேயப்பட்டிருந்த ஆலயம் படிப்படியாக வளர்ச்சி பெற்று மூலஸ்தானத்தை மட்டும் கொண்ட சிறு ஆலயமாக பரிணமித்தது. அருகே வீதியோரம் பாரிய வேப்பமரமொன்று கிளை பரப்பி இதமளித்தது. பின்னர் இவ் ஆலயத்தினை சற்று விரிவாக்க திட்டமிடப்பட்டது. வாலையம்மன் சனசமூக நிலைய இளைஞர்களால் சீனிவாசகம் சின்னம்மா என்பவருடன் இணைந்து முன் மண்டபம் அமைத்தனர். இவ் ஆலய மூல மூர்த்தி அறை பகலில் பூட்டப்படுவதில்லை. யாரும் பூசிக்கலாம் தடையில்லை.

அமரர் தம்பிஜயா குருக்கள் அவர்கள் இவ் ஆலயத்துடன் தன்னை இணைத்து பணியாற்றினார். இவரது காலத்திலே தான் ஆலயத்திலே சடையம்மா மடாதீனம் சிறப்புமிக்கதாக மாற்றமடைந்து அறுபத்துமூன்று நாயன்மார்களது குருபூசை முறையும் ஏற்படுத்தப்பட்டு, படிப்படியாக மண்டபங்கள் போடப்பட்டு வைரவர், சிவன், அம்பிகை, முருகன் போன்ற தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இவ் ஆலயத்தில் 1980இல் எழுந்தருளி விநாயகர் திருவுருவம் அமைக்க பாடுபட்டவர்களில் அமரர்களாகிய திரு ச. நடராசா வாத்தியார், நாவற்குழி சின்னையா, சி. தம்பிஜயா ஆகியோரின் பணி மகத்தானது. அக்காலத்திலேயே அலங்கார உற்சவமுறை ஏற்படுத்தப்பட்டது. 1987களில் வாலையம்மன் சனசமூக நிலையத்தினால் 1 ½ பரப்பு காணி வாங்கி அன்பளிப்பு செய் யப்பட்டது. 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வினால் இவ் ஆலயம் அதிக சேதமடைந்து 2013ஆம் ஆண்டில் சந்தர விமானமுடைய மூலஸ்தான், அலங்கார மண்டபம், தாமரைத்தடாக வசந்த மண்டபம் எழுந்தருளி சபாமண்டபங்கள், வைரவமூர்த்தி ஆல யம், 25 அடி உயர மணிக்கோபுரம், 63 அடி நீள சடையம்மா மடம் என்பன அமைக்கப்பட்டு அழகொளிரும் எழில்மிகு ஆலய மாக வளர்ந்துள்ளது. இவ் ஆலயம் வரலாறு காணாத வளர்ச் சியை ஓரிரு ஆண்டுகளில் எட்டியது.

சிறிய உள்வீதியை மட்டும் கொண்டிருந்த ஆலயம் திரு ச. நடராசா வாத்தியாரது தாராள கொடையால் உள்வீதி, வெளிவீதி என இரு வீதிகளையும் சிங்கராஜா குடும்பத்தவரால் தேர்ஒன்றையும், அ.இராஜரட்ணம் குடும்ப உதவியால் தேர்மடம், சமையலறை அமைக்க காணியையும் பெற்றதோடு அமரர் பக்த குணசீலனது உதவியால் தேர் தரிப்பிடத்திற்கான பெருமளவு உதவியையும் பெற்றது. 2006ஆம் ஆண்டு முதல் தேர் பவனி வருவதையும் காணமுடிகின்றது. இன்று பல மில்லியன் செலவில் புனரமைப்பு பெற்று சிறப்பான ஆலயமாகவும் சடையம்மா மட தலைமையகத்தையும் கொண்டு சிறப்பான ஆன்மீக பணிபுரிந்து வருகின்றது. ஆலயங்களில் அன்னசத்திர மடங்கள் அற்றுப்போகும் இக் காலத்தில் அறுபத்துமூன்று நாயன்மார், தொகையடியார், ஈழத்து சித்தர்களது குருபூசை நடைபெறும் மடமும் அமைக்கப்பட்டுள்ளது.

**மலராக்கம் :**
எஸ்.பத்மநாதன், கே.சண்முகதாசன், வி.கஜன்.


விளம்பர அனுசரணை :
**கேதிஸ் களஞ்சியம்**
இல.05, பருத்தித்துறை வீதி.
நல்லூர் மாக்கட், கல்வியங்காடு.


### தமிழ்த்துறைப் பேராசிரியரின் வாழ்த்துரை



நல்லூர்ச் சூழல் எப்போதும் பக்திமயமானது. நல்லூர் ஆலய மணி ஓசை கேட்கும் பகுதியிலே உள்ள அடியவர்களுக்குக் குறையேதும் எக்காலத்தும் இல்லை. இச்சூழலிலே எழுந்தருளி இருக்கும் வெள்ளைப் பிள்ளையாருடைய திருவருட்கடாட்சம் அடியவர்களை ஆட்கொண்டுள்ளமையை இந்த ஆலயத்தின் வளர்ச்சிப் போக்கினைக் கொண்டு கண்டுகொள்ளலாம். கந்தபுராணகலாசாரம் நன்கு ஊறிய வெள்ளைப் பிள்ளையார் சூழலிலே கந்தபுராணத்தை ஓதும் அடியவர்கள் பலர் இருந்தார்கள். புராணபடனம் சிறப்பாக நடைபெற்று வந்தது.

அழகு பொலிய அருமையான அமைப்பிலே புதுப்பொலிவுடன் வெள்ளைப்பிள்ளையார் ஆலயம் நிமிர்ந்து நிற்கிறது. ஆலயகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று அடியவர்கள் எண்ணிய எண்ணியாங்கு எய்தவேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

பேராசிரிய்ர்.எஸ்.சிவலிங்கராஜா
தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம்

### இந்துநாகரிகத்துறைப் பேராசிரியரின் வாழ்த்துச் செய்தி



யாழ்.திருநெல்வேலி வெள்ளைப்பிள்ளையாருக்கு புனராவர்த்தனப் பிரதிஷ்டை இன்று மிகவும் சிறப்பாக நடைபெறுவதைக் கண்களிப்பக்கண்டு பேரானந்தம் அடைகின்றோம். சிவாகமங்கள் கூறும் ஆலயக்கிரியைகளில் பிரதிஷ்டை எனப்படும் கும்பாபிஷேகம் தனிச்சிறப்புடன் விளங்குகின்றது. இந்த வகையில் இவ் ஆலயத்தில் திருப்பணிகள் சிறப்புற நிறைவேறி இன்று புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கிடைத்துள்ளது. இப் பெருஞ்சாந்தி சிறப்புற எல்லா வகையிலும் உதவிய சிவாச்சாரியர்கள், அறங்காவலர்கள், உள்ளூர் மற்றும் வெளியூரில் வாழும் அன்பர்கள் அனை வரையும் வாழ்த்தி வணங்குவதுடன் அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்க வளத்துடன் என்று வாழ்த்துகின்றோம்.

பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதன்,
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

### நல்லூர் பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி



இவ் ஆலயம் விநாயகப் பெருமானின் அருட் கடாட்சத்தால் புதிய இராஜகோபுரத்துடன் மேலும் மண்டபங்கள், பரிபால மூர்த்திகளுக்கான ஆலயங்களுடன் இன்று மஹாகும்பாபிஷேகம் காண்கிறது. நல்லூர் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களில் இவ் ஆலயம் சிறப்பாக உள்ளது. இங்குள்ள சடையம்மா மடம் 1975 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இயங்கி அடியார்களுக்கு பல நற்பணிகளை ஆற்றி வரு கின்றது. ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் 2000ஆம் ஆண்டு இடம்பெற்றது. இன்று இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெறுவது சிறப்பான அம்சமாகும். இத் திருப்பணித் தொண்டினில் தொண்டாற்றிய ஆலய பரிபாலன சபையினருக்கும் ஊர் மக்களுக்கும் எல்லாம் வல்ல வெள்ளைப்பிள்ளையார் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

பா. செந்தில்நந்தனன், பிரதேச செயலர், நல்லூர்

### இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் வாழ்த்துச்செய்தி



வெள்ளைப் பிள்ளையார் கோவில் எனும் நாமம் கொண்ட இவ்வாலயம் மிக அற்புதமும், பழைமையும் வாய்ந்தது. இங்கு வைக்கப்படும் நேர்த்திகள் நீதியானவையாக இருந்தால் அதை நிறைவேற்றி வைப்பவர் வெள்ளைப்பிள்ளையார். இப்படியான மகிமை மிகு இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடக்கிறது என்றால் அது மிகவும் போற்றத்தக்க புண்ணியமான நிகழ்வாகும். இக்கும்பாபிஷேகப் பெருவிழாவில் அனைவரும் கலந்து கொண்டு, தும்பிக்கையானை நம்பிக்கையுடன் தொழுது வேண்டும் வரங்களைப் பெறவேண்டுமென அடியார்கள் அனைவரையும் வாழ்த்துவதுடன் மேன்மேலும் இவ்வாலயம் வரலாற்றுச் சிறப்புடன் அனைவரது உள்ளங்களிலும் என்றும் நிறைந்திருக்க வேண்டும். மகாகும்பாபிஷேகமும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
திருமதி.மாணிக்கராஜசர்மா-அனந்தலெட்சுமி
(இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்) யாழ்ப்பாணம.

### ஆலய பரிபாலனசபைத் தலைவரின் வாழ்த்துச்செய்தி



'வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் வினைகளே"

என்ற உயர் வாக்கியத்தின் உட்பொருளாய் விளங்கும் ஓம் எனும் பிரணவ ரூப வெள்ளை விநாயகப் பெருமானின் குடமுழுக்கு என்று சொல்லப்படும் பெரும் சாந்தி விழா காணும் பெரும் பேறு கிடைத் தமையிட்டு உளம் மகிழ்வதோடு மலர் சிறக்கவும் இப்புண்ணிய தெய்வ கைங்கரியத்திற்கு பண உதவி, பொருளுதவி, சரீரஉதவி வழங்கிய விநாஜக அடியவர்கள் அனைவருக்கும் முதற்கண் எனது மனமார்ந்த ஆசியையும் நன்றியறிதலையும் தெரிவித்து அனைவருக்கும் கணபதி கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திப்பதோடு அனைவருக்கும் செல்வத்துள் மேலான செல்வமான நோயற்ற வாழ்வு வாழ்ந்து நிறைவு காண வாழ்த்தி வணங்குகின்றேன்.

த.சண்முகநாதன், தலைவர்,
ஆலய பரிபாலன சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமன்னார் மீனவர்களின் மீன்பிடித் தடையை நீக்குங்கள்

## ஆனந்தன் எம்.பி. கோரிக்கை



(குருமன்காடு)

**தலைமன்னார் கடற்பரப்புக்குட்பட்ட தீடைகளில் காலம் காலமாக மீன்பிடிப்பில் ஈடுபட்டு வந்த மீனவர்கள் அங்கு தமது தொழிலை மேற்கொள்ள முடியாதவாறு தடுக்கப்படுகின்றனர்.**

இலங்கைக் கடற்படையினரின் இப்புதிய தடை உத்தரவினால் நூற்றுக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மீதான தடையை நீக்கி சுதந்திரமாக மீன் பிடிப்பில் ஈடுபட நடவடிக்கை எடுக்குமாறு மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவரால் அமைச்சருக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

பரம்பரை பரம்பரையாகத் தலைமன்னார் கடற்பரப்பிலுள்ள இலங்கைக் கடல் எல்லைக் குட்பட்ட தீடைகளில் தலைமன்னார் கிராம மீனவர்கள் வள்ளங்களில் சென்று வலை வளைத்து மீன் பிடித் தொழிலை மேற்கொண்டு வந்துள்ளனர்.

கடந்த மூன்று தசாப்தகால யுத்த முன்னெடுப்புக்களால் இப்பிரதேச மீனவர்கள் தமது வள்ளங்கள், என்ஜின்கள், வலைகள் முதலான தொழில் உபகரணங்களை இழந்தும் வாடிகள் எரியூட்டப்படும் வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் பலகாலமாக வறுமையில் வாழ்ந்துள்ளனர். இந்திய தமிழ் நாட்டுக் கரையோரங்களில் தமது வள்ளங்கள் உட்பட தொழில் உபகரணங்களுடன் தஞ்சம் புகுந்தோர் அங்குள்ள தாசில்தார்களிடம் அவற்றினை ஒப்படைத்து அகதி வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். அவர்கள் மீண்டும் தாயகம் திரும்பியபோது அவ் உபகரணங்கள் தொலைந்துவிட்டதாகவும் இலங்கையில் வைத்து அவற்றிற்கு பதிலீடு வழங்கப்படும் என்ற உத்தரவாதத்துடன் இந்திய அரசால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்வாறு பல இன்னல்களுடனும் பாரிய பொருள் இழப்புக்களுடனும் சுமார் 500இற்கும் அதிகமான மீனவர்கள் தற்போது குறிப்பாகத் தீடை மீன்பிடியில் ஈடுபட்டு வருமானமீட்டுகின்றனர்.

2009 மே மாதத்தின் பின்னர் தற்போது மீன்பிடி அனுமதி அட்டை நடைமுறை நீக்கப்பட்டு கரையிலுள்ள கடற்படை அதிகாரிகளால் சுமுகமாக மீன்பிடிக்க இவர்கள் அனுமதிக்கப்படுகின்றபோதும் நடுக்கடலில் இந்திய-இலங்கை கடல் எல்லையில் ரோந்தில் ஈடுபடும் இலங்கைக் கடற்படை அதிகாரிகளால் தடுக்கப்படுகிறார்கள்.

தீடையில் மீன்பிடிக்க மறுக்கப்படும் இவர்களை ரோந்துக் கடற்படையினர் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லுமாறு பணிக்கின்றனர்.

இப்புதிய நடைமுறையால் தமது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தம்மிடம் முறையிடும் இம் மீனவர்களை அதிகப்படியான மீன் அறுவடையாகும் தீட பூமியில் மீன் பிடிக்கத் தடையில்லாமல் அனுமதிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணிப்பதோடு இம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்குமாறும் மீன்பிடி அமைச்சரிடம் சிவசக்தி ஆனந்தன் தனது கடிதத்தில் கோரியுள்ளார். (அ-2-250)

## கூட்டமைப்புக்கு எதிராக நீதிமன்றம் சென்றால் அதை எதிர்கொள்ள தயார்

தமிழ் மக்களின் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணைக்குழுவிற்கு கொண்டு சென்றமையானது இலங்கையின் சட்டத்திற்கு முரணானது என எவராவது குற்றம் சுமத்தினால் எவரும் தனக்கெதிராக நீதிமன்றத்திற்கு செல்லலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையின் அதியுயர் நாடாளுமன்ற மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தை மீறி சர்வதேசத்தில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருவதாக ராவணா சக்தி அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தேகந்தே சத்தா திஸ்ஸ தேரர் தெரிவித்திருந்தமை குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தமது நாடாளுமன்ற குழு ஜெனீவாவில் செயற்பட்ட விதம் தொடர்பில் கூட்டமைப்புக்கு எதிராக எவரேனும் நீதிமன்றத்திற்கு சென்றால் அதனை எதிர்கொள்ள கூட்டமைப்பு தயாராக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் ஜெனீவாவுக்கு சென்று ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதான நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து இலங்கை தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து தெளிவுபடுத்தியிருந்தனர். (அ-2)



*செலான் வங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டதன் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா நாடளாவிய ரீதியில் அண்மையில் கொண்டாடப்பட்டது. இதன் ஓர் அங்கமாக நெல்லியடி செலான் வங்கிக்கிளையில் நடைபெற்ற நிகழ்வின்போது... (படம்:- கரணவாய் செய்தியாளர்)*

## வல்வெட்டியில் குடும்ப வன்முறை அதிகரிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் இவ்வருடம் அதிகளவான குடும்ப வன்முறை சம்பவங்கள் பொலிஸ் நிலைய புள்ளி விபர பதிவேட்டில் பதிவாகியுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இம்மாதம் வரை ஏனைய வழக்குகளை விட குடும்ப வன்முறை வழக்குகளே அதிகம் பதிவாகியுள்ளது.

இதற்கு முக்கிய காரணங்களாக வறுமை, கணவன்-மனைவிக்கு இடையில் புரிந்துணர்வு மற்றும் விட்டுக் கொடுப்பு இன்மை, சந்தேகம், மது போதை போன்றன காணப்படுகின்றன.

இதில் பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரினால் சமாதானப்படுத்தி தீர்வு ஏற்பட்டபின் வன்முறைக்கு உரியவர்களை சமாதானப்படுத்தி வழக்குகள் தீர்த்து வைக்கப்படுகின்றது.

ஏனைய வழக்குகளை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-3-24)

## நூல்வெளியீட்டு விழா

(பூந்தோட்டம்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரியர் பயிலுநர்களின் நற்சிந்தனை தொகுப்பான உடன்பாடான மனப்பாங்குகள் பாகம் 2 நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரியின் பல்நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரியின் பீடாதிபதி க.பேர்ணாட் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வரலாற்று ஆய்வாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான அருணா செல்லத்துரை கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வின் வெளியீட்டு உரையினை வீ.ரஞ்சினி ஆற்ற ஆய்வுரையினை இக் கல்லூரியின் பழைய மாணவர் சி.வரதராஜன் நிகழ்த்துவார். (அ-2-266)

## மஹோற்சவம்

(சித்தன்கேணி)

ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மஹோற்சவ நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை மஞ்சத் திருவிழாவும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடப வாகனத்தில் பெரிய சப்பறக் காட்சியும் இடம்பெறவுள்ளது.

மறுநாள் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் சண்முகர் அபிஷேகமும் ஷண்முகார்ச்சனையும் இடம்பெறவுள்ளது.

25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்வசமும் மஹாயாக கும்ப அபிஷேகமும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 1008 சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-3-17)

## மலையக தமிழர்களின் பிரச்சினையும் ஐ.நா. சபையின் கவனத்துக்கு செல்லும்

### மனோகணேசன் எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழக முதல்வர் கச்சதீவை மீளக் கோரினால் இலங்கையில் வாழும் இந்திய தமிழர்களை நாடு கடத்த வேண்டும் என்று இனவாதிகள் கூறுவதை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இது முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சு போடுவதாகும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் கட்டி அணைத்து உறவு கொள்ளும்போது இந்நாட்டு சிங்கள மக்களும் வங்காளத்தில் இருந்து வந்த வட இந்தியர்கள் என சொல்லுவதும் பின் இந்தியாவுடன் சச்சரவு வந்தால் இந்தியா மீதுள்ள கோபத்தை இந்நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களிடம் காட்டி அதற்கு அவர்களை பலிக்கடா ஆக்குவதும் தொடர்ந்து நடந்து வரும் ஒரு இனவாத நாடகமாகும்.

இதற்கு இனி மேல் இடம்கொடுக்க முடியாது. இந்த இனவாத நடிகர்களுக்கு பின்னால் இருக்கும் அரசாங்கம் இவர்களை கட்டுப்படுத்த வேண்டும்.

இந்த இனவாத கூச்சல்கள் தொடருமானால் இந்நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களின் பிரச்சினையும் ஐ.நா. சபையின் கவனத்துக்கு நாம் கொண்டு செல்ல வேண்டி வரும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## இலங்கை மனிதவுரிமைகள் குறித்து கண்காணிக்க சர்வதேச பொறிமுறை

### அவசியம் என்கிறார் அனர்த்தக்குழு பணிப்பாளர்

இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து கண்காணிப்பதற்கு விசேட பொறிமுறைமை ஒன்று அவசியம் என சர்வதேச அனர்த்தக் குழுவின் இலங்கைப் பணிப்பாளர் அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கவும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவும் அரசாங்கம் தவறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் நீண்ட காலமாக ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் இதற்கு எதிராக காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

தமிழ் மற்றும் முஸ்லிம்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வினை வழங்க அரசாங்கம் முனைப்புக் காட்டத் தவறியுள்ளது.

தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள தவறியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் அரசாங்கப் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தப்படும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் காத்திரமான விசாரணை நடத்த அரசாங்கம் முன்வரவில்லை.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நேரம் வரும் போது அடங்காத மாடும் நுகத் தடியை சுமக்கத்தான் வேண்டும்.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valamprii.lk

# சட்டம் ஒழுங்கு கட்டவிழ்ந்து போயிற்று

குடாநாட்டில் இப்போது தாதாக்களின் அடாவடித்தனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

வீதிச் சண்டைகள், வீடு புகுந்து தாக்கும் சண்டித்தனங்கள், பெண் பிள்ளைகளுடன் விடும் சேட்டைகள், பலாத்காரக் கடத்தல்கள், கொலைகள், கொள்ளைகள் என எங்கும் ஒழுங்கீனங்களையே காண முடிகின்றது.

உதாரணத்திற்கு யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையே கிரிக்கெட் போட்டி நடைபெறும் போது, இளைஞர் குழுக்கள் வீதிகளில் செய்யும் அட்டகாசங்கள் குடாநாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டதென்பதற்குத் தக்க சான்றாகும்.

இது தவிர வாள்வெட்டுக் கலாசாரங்களுக்கும் குறைவில்லை என்றாயிற்று. இத்தகைய கோரத்தனங்கள் யாழ்ப்பாணத்தில் மக்கள் நடமாட முடியாதென்ற துர்ப்பாக்கிய நிலையையும்,

சண்டை, சச்சரவு என்பவற்றை அறவே விரும்பாதவர்கள் வாழ முடியாதென்ற சூழமைவையும் உருவாக்கும். போருக்குப் பின்பான யாழ்ப்பாண நிலைமைக்கு யார் காரணம் என்ற கேள்விகள் எழும்போது பொலிஸார் தங்களின் கடமையை செம்மையாக செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு எழும்.

யாழ்.குடாநாட்டில் பொலிஸ் அலுவலகங்களும் உப நிலையங்களும் பரவலாக இருக்கின்ற போதிலும், பொலிஸாருக்கு இம்மியும் பயப்படாத அளவில் தெருச் சண்டைகளும், வாள்வெட்டுக்களும், கொலைகளும் சாதாரணமாக இடம் பொறுகின்றன எனில்,

பொலிஸார் தொடர்பில் ஏதோ சிக்கல் இருக்கிறது என்ற முடிபை எடுப்பது தவிர்க்க முடியாததே.

பொலிஸாரின் இத்தகைய அசமந்தப் போக்கு இனப்பாகுபாட்டின் அடிப்படையிலேயே நோக்கப்படும் என்பதை பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உணர்ந்து கொள்வது அவசியம்.

அதாவது, தமிழர் பிரதேசத்தில் கலகமும் அட்டகாசங்களும் நடக்கட்டும் அதனைக் கட்டுப் படுத்தாது நாம் வேடிக்கை பார்ப்போம் என்றே பொலிஸார் நினைப்பதாகத் தமிழ் மக்கள் கருதுவர்.

இத்தகைய கருத்து நிலைகள் இன ஒற்றுமைக்கு ஆரோக்கியமானதல்ல. ஆகையால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸார் விசேட ஏற்பாட்டைச் செய்தாக வேண்டும்.

பொலிஸ் பாதுகாப்பு என்ற நிலை கடந்து வாள் வெட்டுக் கலாசாரங்கள் மேல் எழுமாக இருந்தால், அதற்குப் பொலிஸாரும் துணை போகின்றனரா என்ற கேள்விக்கு இடம் கொடுத்தால், பொலிஸார் மீதான நம்பிக்கைகள் அவமாகிவிடும்.

# தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தினால் மீண்டுமொரு பிரபாகரன் உருவெடுப்பார்

## மனோ கணேசன் எச்சரிக்கை



(கொழும்பு)

இனவாதக் கட்சிகளின் மிரட்டல்களுக்குத் தமிழக மக்களோ அல்லது இந்தியா மத்திய அரச தரப்பினரோ அடிபணியமாட்டார்கள்.

ஏனெனில் தமிழக மக்கள் இலங்கைத் தமிழர்களின் நீதிக்காக தீர்வுக்காக ஜனநாயகப் போராட்டங்களைத்தான் அங்கு நடத்துகின்றனர்.

அதைத் தவறெனக் கூறுவதற்கு எவருக்கும் அருகதை கிடையாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இனவாதக்குழுக்கள் இலங்கையில் தமிழ் மக்கள் மீது தாக்குதல்களை நடத்தினால் பெரும் விபரீதங்களை அரசு சந்திக்க வேண்டிவரும். மீண்டும் ஓர் ஆயுதப்போராட்டம் இங்கு ஆரம்பமாகும். மீண்டும் ஒரு பிரபாகரன் உருவெடுப்பார் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்கள், பௌத்த பிக்குகள் மீதான தாக்குதல்கள் தமிழ்நாட்டில் தொடர்ந்து அரங்கேறி வருவதன் எதிரொலியாக இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு எதிராக ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் அதற்கு இந்திய மத்திய அரசே முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்று சிங்கள கடும் போக்கு அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்திருந்தன. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்மேலும் தெரிவித்தமை வருமாறு,

இலங்கை அரச படைகளின் கொடூர யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு நீதி வேண்டி தமிழகத்தில் ஜனநாயக ரீதியில் தான் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. எந்த வித அரசியல் தலையீடுகளுமின்றி தமிழக மாணவர்கள் முன்னெடுத்த போராட்டம் இன்று அரசியல் தலைவர்களையே வியக்க வைக்கும் அளவிற்கு பேரெழுச்சி கண்டுள்ளது.

இலங்கை அரசிற்கு எதிராகத் தான் அங்கு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் இலங்கை அரசுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளுக்கும் அங்கு எதிர்ப்புகள் வலுத்து வருகின்றன.

ஆனால் அங்கு நடைபெறும் போராட்டங்கள் ஜனநாயக ரீதியில் நடைபெறுகின்றன. இலங்கையில் நடைபெறும் போராட்டங்களைப் போல அரச பயங்கரவாதத்தின் தூண்டுதலினாலோ அல்லது அரச பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலோ போராட்டங்கள் நடைபெறவில்லை.

இந்த நிலையில் அரசுக்கு எதிரான போராட்டங்கள், பௌத்தர்கள் மீதான தாக்குதல்கள் தமிழகத்தில் தொடர்ந்தால் இலங்கையில் உள்ள தமிழர்கள் தம்மால் தாக்கப்படுவார்கள் என அரசுடன் சேர்ந்தியங்கும் இனவாதக்கட்சிகள் மிரட்டல் பாணியில் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இலங்கையில் தமிழருக்கு எதிரான சிங்கள இனவாதக் குழுக்களின் அடக்குமுறை, அட்டூழியங்கள் தலைதூக்கிய போது அதற்கு எதிராக விடுதலைப் புலிகளின் தலைமையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பமானதை இந்த அரசு நினைவில் கொள்ள வேண்டும்.

அதே வேளை, சர்வதேச சமூகமும் தற்போது இலங்கை அரசுக்கு எதிராக நிற்பதை இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே இனவாதக் கருத்துக்களைக் கக்கி தமிழ் மக்களை மிரட்டுவோருக்கு அரசு புத்திமதி கூறிவைக்க வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார். (எ-11)

# 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு 47 ஆயிரம் ரூபாய் மாதச் செலவு

(கொழும்பு)

நான்கு பேரைக் கொண்ட குடும்பமொன்றின் மாதச்செலவு 47 ஆயிரத்து 748 ரூபாய் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டிக்கு அமைய நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றின் மாதாந்த வாழ்க்கைச் செலவு 47 ஆயிரத்து 748 ரூபாய் 39 சதம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் பெப்ரவரி மாதம் இலங்கை குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரத்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

2006-2007ஆம் ஆண்டுகாலப்பகுதியில் 100 ரூபாயிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கு தற்போது 170 ரூபாய் செலுத்த வேண்டியுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)




ஒருவர் ஒன்றை அடையவேண்டும் என்று விரும்பினால் அதை எப்பாடுபட்டாவது அடையப் பல முயற்சிகள் செய்வார். உலகியல் வாழ்விலே அந்த முயற்சிகள் சிறப்பான பெயர்களையும் பெற்றுள்ளன. ஒரு நிலப்பரப்பை ஒருவர் ஆட்சிப்படுத்தலாம் அல்லது விற்கலாம். அல்லது ஒற்றிவைக்கலாம். இம்மூன்றும் உலகியலிலே நடைமுறையிலே உள்ளவை. ஆட்சிப்படுத்தல் என்பது நிலத்தைச் சொந்தமாக்கிக்கொள்ளல். விற்றல் என்பது இன்னொருவருக்கு அந்நிலத்தைச் சொந்தமாகக் கொடுத்து அதற்கான பொருளைப் பெறுதல். ஒற்றிவைத்தல் என்பது ஓரளவு பணத்தைப் பெற்றுக்கொண்டு நிலத்தைப் பயன்படுத்தும் உரிமையை மட்டும் வழங்கல். இந்த நடைமுறைகளைச் செய்யுமாறு மணிவாசகர் இறைவனிடம் கேட்கிறார்.

முதலிலே இறைவனுடைய இரக்கமான செயற்பாடு ஒன்றை நினைக்கிறார். மிக்கநஞ்சு அமுதா அருந்தினனே என்ற தொடர் இதனைச்சுட்டி நிற்கிறது. பெருநஞ்சான ஆலகாலவிடத்தைத் தேவரைக் காப்பதற்காக அமிழ்தம் போல எடுத்து உண்ட அருட்செயல். அதுமட்டுமல்ல பிறவியாகிய பிணியில் அகப்பட்டுத் துன்புற்றுக்கீழ்மை நிலையிலே இருப்பவர்களுக்கு அவர்களை அத்தீராத நோயினின்றும் மீட்கின்ற மருந்தாக இருப்பவன். எனவே தன்னையும் கைவிடமாட்டான் என எண்ணுகிறார்.

எனினும்தன்னைஅவர்விருந்தினன் என்றே கருதுகிறார். விருந்து என்பது புதுமையெனப் பொருள்படும். தான் புதிய அடியவன் என்கிறார். இறைவனோடு சேர்ந்த மெய்யடியார்கள் பழவடியார்களாக முன்னே ஆட்கொள்ளப்பட்டவர்களாகவும் தான்புதிய அடியானாக விருந்தினேன் எனக்குறிப்பிட்டுள்ளார். இறைவன் தன்னை அடிமைத் தொண்டனாகவாவது ஆட்சி பண்ணவேண்டுமென விரும்புகிறார். மணிவாசகர் பாண்டிய மன்னனின் ஆட்சிக்குக்கீழ் வாழ்ந்தவர். அந்த வாழ்வியலைப் போலவே இறைவன் ஆட்சிக்குக்கீழ் வாழ விரும்புகிறார். எனவே முதலில் இருந்து எனை ஆண்டு கொள் என்று கேட்கிறார். என்னை நீ உன்னுடைய அடிமைத்தொண்டனாக ஆட்சிப் படுத்திக்கொள். அடுத்து விற்றுக்கொள், ஒற்றிவை எனக்கேட்கிறார். தனக்குரிய உரிமை முழுவதையும் இழந்து அருளைப் பெறவிரும்புகிறார். அது கிடையாவிட்டால் அருள் முழுமையாகக் கிடையாவிட்டாலும் அதை அனுபவிக்க வழி செய்யுமாறு வேண்டுகிறார். இத்தகைய ஒரு வேண்டுதலைத் தேவாரங்களிலும் காணமுடிகிறது.

ஊன்றி நின்றார் ஐவர்க் கொற்றி வைத்தாய் பின்னையொற்றி யெல்லாம் சோன்று கொண்டாய் கச்சியே கம்பமேய சுடர் வண்ணனே (நாவு: 99:9) என நாவுக்கரசரும் விற்றுக் கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பி யாட்பட்டேன் (சுந்: 95:2) எனச் சுந்தரரும் தேவாரங்களிலே குறிப்பிட்டுள்ளனர். மணிவாசகர் தான் இறைவனிடம் எந்த உரிமையையும் பாராட்டமுடியாத விருந்தினன் போன்ற அடியவன் எனக் குறிப்பிடுவதன் மூலம் தன்னுடைய பக்தி வாழ்வியலும் புதியதென்பதைக் கூறிவிடுகிறார். மந்திரியாக வாழ்ந்தபோது அவருக்கு அந்த வாழ்வியலால் பெற்ற இன்பங்களே நிலையான இன்பங்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

களாகத் தோன்றின. ஆனால் திருப்பெருந்துறையிலே அவர் பெற்ற பக்தியனுபவம் உலகியலின்பத்தை விடப் பன்மடங்கு மேலானது என்பதை உணர்ந்தார். அந்த அனுபவத்தை மீண்டும் பெறுவதற்காக இறைவனை வேண்டிப் பாடிய பாடல்கள் எல்லோரையும் பக்திநெறிக்கு இட்டுச் செல்லும்.

இருந்தென்னை ஆண்டுகொள்
விற்றுக்கொள்
ஒற்றிவை யென்னினல்லால்
விருந்தினனேனை விடுதிகண் டாய்
மிக்க நஞ்சமுதா
அருந்தின னேமன்னும் உத்தர
கோச மங் கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப்
பட்டு மடங்கினர்க்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ.பி.எல்.போட்டிகளில் இருந்து இலங்கை வீரர்கள் விலகவேண்டும்

## பொரிகிறார் முன்னாள் இலங்கை அணி தலைவர் ரணதுங்க

இந்தியாவின் ஒரு பகுதியில் விளையாடக் கூடாது என்றால், அப்படிப்பட்ட ஐபிஎல் போட்டிகளே நமக்கு வேண்டாம். எனவே இலங்கை அணி வீரர்கள், ஐபிஎல்லில் விளையாடாமல் தவிர்க்க வேண்டும் என்று முன்னாள் இலங்கை அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்கா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், சென்னையில் நடைபெறும் ஐபிஎல் போட்டிகளில் இலங்கை வீரர்களை அனுமதிப்பதில்லை என்று ஐபிஎல் நிர்வாகம் அறிவித்திருப்பது அதிர்ச்சி தருகிறது. சென்னையில் இலங்கை வீரர்கள் விளையாட முடியாவிட்டால், மற்ற இடங்களிலும் அவர்கள் விளையாடக் கூடாது. தனிப்பட்ட முறையில் எனது கருத்து என்னவென்றால், இந்தியாவில் எந்தப் பகுதியிலும் இலங்கை வீரர்கள் விளையாடக்கூடாது. பணத்துக்காக போய் விளையாடக் கூடாது. போர்க்குற்றத்தைக் காரணம் காட்டி இலங்கை வீரர்களுக்கு தென்னிந்தியாவில் அரசுத் தரப்பிலிருந்தும், மக்களிடமிருந்தும் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. இது இலங்கை மீதான குற்றச்சாட் டா



கும். எனவே இதையும் இலங்கை வீரர்கள் மனதில் கொண்டு உடனடியாக ஐபிஎல் போட்டிகளிலிருந்து விலக வேண்டும். இது அரசியல் ரீதியான வேடிக்கை விளையாட்டு. இதில் கிரிக்கெட் அடிபட்டிருக்கிறது. வீரர்கள் விளையாடி ரசிகர்களை மகிழ்விக்கவே விரும்புகிறார்கள் என்றார் ரணதுங்கா. ரணதுங்கா இலங்கை அரசியலிலும் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல்.விவகாரம் தி.மு.க.இரட்டை வேடம்

## - குமுறுகிறார் ஜெயா

இலங்கை வீரர்கள் பங்குபற்றினால் தமிழகத்தில் ஐ.பி.எல்.போட்டிகளை நடத்த விடமாட்டோம் என்று தமிழக மாணவர் கூட்டமைப்பு எச்சரித்திருந்த நிலையில் சென்னையில் நடைபெறும் போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்குபற்ற முடியாது என முதல்வர் ஜெயலலிதா தடை விதித்திருந்தார்.


இந்நிலையில் இப்பிரச்சினை தொடர்பாக தமிழக சட்ட சபையில் உரையாற்றிய தமிழக முதல்வர் ஜெயலலிதா, தி.மு.க., குடும்பத்திற்குச் சொந்தமான ஐ.பி.எல்., அணியில், இலங்கை வீரர்களை அனுமதித்து தி.மு.க., இரட்டை வேடம் போடுவதாக குற்றஞ்சாட்டினார். தி.மு.க.,வின் இந்த செயல் சுயநலத்தின் உச்சகட்டம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து தி.மு.க.,வின் நட்சத்திர பேச்சாளரான நடிகை குஷ்பு, இவ்விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியுள்ளார். எனினும் இது தொடர்பாக ஐதராபாத் அணியிலிருந்து எந்த தகவலும் இல்லை.

சமீபத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பேரன் கலாநிதிமாறனின் சன் குழுமம், ஹைதராபாத் அணியினை விலைக்கு வாங்கியதுடன் அதற்கு "சன்ரைசர்ஸ் ஹைதராபாத்" என பெயரிட்டது. இவ்வணியில் சங்கக்கார மற்றும் பெரேரா ஆகிய இரு இலங்கை வீரர்கள் இடம்பெற்றுள்ள நிலையில் சங்கக்கார அணித் தலைவராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'சென்னையில் இருந்து ஐ.பி.எல் போட்டிகளை மாற்றினால் அதை கேரளாவில் நடத்தலாம்'

## - இப்படிச் சொல்கிறார் கேரள முதல்வர்



சென்னையில் இருந்து ஐபிஎல் போட்டியை மாற்றினால் அதை கேரளத்தில் நடத்தத் தயார் என்று அம் மாநில முதல்வர் உம்மன்சாண்டி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெறும் ஐபிஎல் போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்கேற்க தமிழக முதல்வர் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், திருவனந்தபுரத்தில் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களை சந்தித்த கேரள முதல்வர் உம்மன்சாண்டி கூறியது:

ஐபிஎல் போட்டியை நாங்கள் வரவேற்கிறோம். கொச்சியில் ஐபிஎல் போட்டியை நடத்தும் அவசியம் ஏற்பட்டால் கேரள கிரிக்கெட் சங்கத்துக்கு மாநில அரசு முழு ஆதரவு கொடுக்கும். போட்டியை நடத்துவதற்கு தேவையான பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் அரசு செய்து கொடுக்கும்" என்றார்.

முன்னதாக கேரள கிரிக்கெட் சங்க செயலர் டி.சி.மேத்யூ தலைமையிலான குழு, உம்மன்சாண்டியை சந்தித்து 6ஆவது ஐபிஎல் போட்டியை நடத்துவதற்கு ஆதரவு தருமாறு கேட்டது குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். அணி உரிமையாளர்கள் கண்டனம்

இலங்கை வீரர்களை தமது ஆலோசனையின்றி ஐ.பி.எல். போட்டிகளிலிருந்து நீக்கியமை தொடர்பில் ஐ.பி.எல். அணிகளின் உரிமையாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஐ.பி.எல். ஏற்பாட்டுக்குழு எடுத்த இந்த தீர்மானம் மூலம் சென்னை அணிக்கு சாதகமான தன்மை ஏற்படலாம் என்றும் அணி உரிமையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு தீர்மானத்தை மேற்கொள்ளும் முன்னர் தமக்கு தெளிவுபடுத்தாமையினால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளில் 13 இலங்கை வீரர்கள் கலந்துகொள்கின்ற போதிலும் அதில் இரண்டு வீரர்கள் மாத்திரமே சென்னை அணியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக ஏனைய 11 வீரர்களுக்கும் சென்னையில் நடைபெறுகின்ற போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமையினால் அநீதி இழைக்கப்படுவதாக அணி உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# சூடுபிடிக்கிறது ரிக்கெட் விற்பனை



சென்னையில் நடைபெறும் முதல் லீக் ஆட்டத்துக்கான (சென்னை-மும்பை மோதல்) டிக்கெட் விற்பனை சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் நடைபெற்றது. டிக்கெட் வாங்க ரசிகர்கள் காலையில் இருந்தே ஸ்டேடியத்துக்கு முன்பு திரண்டிருந்தனர். ஆனால் டிக்கெட் வழங்குவதில் திடீர் பிரச்சினை உருவெடுத்தது. சென்னையில் நடை பெறும் போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்கேற்கமாட்டார்கள் என்று எழுத்து பூர்வமாக தெரிவித்தால் மட்டுமே டிக்கெட் விற்பனைக்கு அனுமதி அளிக்க முடியும் என்று பொலிஸ் தரப்பில், போட்டி அமைப்பாளர்களிடம் தகவல் தெரிவிக்கப் பட்டது. இதனால் டிக்கெட் விற்பனையில் தாமதம் ஏற்பட்டது.

# பங்களாதேசுக்கு எதிரான ரி-20 இலங்கை அணி

பங்களாதேஷ் அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான ரி-20 சர்வதேசப் போட்டிக்கான இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. 16 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தலைவரான டினேஷ் சந்திமாலின் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இக்குழாமின் உப தலைவராக லசித் மலிங்க செயற்படவுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் சிரேஷ்ட வீரர்களான திலகரட்ன டில்ஷான், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

**அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:**


குஷால் ஜனித் பெரேரா, டில்ஷான் முனவீர, லஹிரு திரிமன்ன, டினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ், ஜீவன் மெண்டிஸ், கித்துருவன் விதானகே, அஞ்சலோ பெரேரா, லசித் மலிங்க, சச்சித்திர சேனநாயக்க, ஷமிண்ட எரங்க, சத்துரங்க டீ சில்வா, ஷெஹான் ஜெயசூரிய, றமித் றம்புக்வெல்ல, இஷான் ஜெயரத்ன, திஸர பெரேரா.

# மர்மக் கும்பலால் தாக்கப்பட்ட நியூ.வீரர் மருத்துவமனையில்

நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் ஜெசி ரைடர் நேற்று முன்தினம் இரவு மதுபானசாலையில் ஏற்பட்ட அடிதடியில் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் ஜெசி ரைடர் (வயது28). மெரிவேல் என்ற இடத்தில் உள்ள மதுபானசாலைக்கு நேற்றுமுன்தினம் இரவு சென்றார். அங்கு அவரும் அவரது நண்பர்களும் குடித்து விட்டு வெளியே வந்தபோது யாரோ அவரை தாக்கியுள்ளனர். சுமார் 4 பேர் கொண்ட குழு ரைடரை கடுமையாக தாக்கியதாக சம்பவத்தைப் பார்த்த ஒருவர் தெரிவித்தார். ஆனால் தாக்கியவர்கள் யார், எதற்காக தாக்கினர் என்று இன்னும் தெரியவில்லை. இதனால் ரைடரின் மண்டையோடு உடைந்தது. இதையடுத்து அவர் கிறைஸ்ட்சர்ச் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் கோமாவில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.


அடுத்த வாரம் இந்தியாவில் ஆரம்பிக்கும் ஐபிஎல் போட்டிகளில் டில்லி டேர்டெவில்ஸ் அணிக்காக களமிறங்க இருந்த நிலையில் இந்த துயரச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் வெற்றி; தொடர் சமநிலையானது






இலங்கை அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் டக்வேர்த் லூவிஸ் முறைப் படி பங்களாதேஷ் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9விக்கெட் இழப்பிற்கு 302 ஓட்டங்களை பெற்றது.

அதிக பட்சமாக டில்சான் 125 ஓட்டத்தினையும், பெரேரா 56 ஓட்டத்தினையும், சங்கக்கார 48 ஓட்டத்தினையும் பெற்றனர்.

பந்து வீச்சில் அப்துல் ரசாக் 10 ஓவர்கள் பந்து வீசி 62 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டினை கைப்பற்றினார்.

303 ஓட்டத்தினை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

மழைவிட்டு மீண்டும் போட்டி ஆரம்பிக்கப் படும் போது டக்வேர்த் லூவிஸ் முறைப்படி பங்களாதேஷ் அணிக்கு 27 ஓவர்களில் 183 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப் பட்டது.

பங்களாதேஷ்அணி அவ் இலக்கினை 7 விக்கெட் இழப்பில் அடைந்தது.

மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் முதல் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றிருந்தது. இரண்டாவது போட்டி மழையால் கைவிடப்பட்டது. மூன்றாவது போட்டியில் பங்களாதேஷ் வெற்றி பெற்றதால் தொடர் சமநிலையானது.

போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தொடர் நாயகனாகவும் இலங்கை அணியின் டில்சான் தெரிவானார்.

## சண்டிலிப்பாய் பிரதேச - கிரிக்கெட் பண்டத்தரிப்பு மகளிர் சம்பியன்

(மானிப்பாய்)


சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான பெண்களிற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மைதானத்தில் நடத்தியது.

பெண்களிற்கான போட்டிகளில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இளைஞர் கழகம் சம்பியனாகவும் ஆனைக்கோட்டை இளைஞர் கழகம் ரன்னர்ஸ் அப்பாகவும் தெரிவானது. மூன்றாமிடத்தை மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகம் பெற்றது.

இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இளைஞர் கழகம் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. இதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இளைஞர் கழகம் சார்பாக சுதர்சிகா 26 ஓட்டங்களையும், சுபீனா, சனோஜா தலா 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஆனைக்கோட்டை இளைஞர் கழகம் சார்பாக கார்த்திகாயினி 2 இலக்கினைக் கைப்பற்றினார்.



பதிலுக்கு 82 என்னும் வெற்றி இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய ஆனைக் கோட்டை இளைஞர் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 49 ஓட்டங்களைப் பெற்று போட்டியில் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் சோபா 32 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். (23)





தெல்லிப்பழை கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் 19 வயது ஆண்களுக்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன. இதில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணி 25:20, 22:25 , 25:23 என்ற செட் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. மூன்றாம் இடத்துக்கான போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும், மல்லாகம் மகா வித்தியாலயமும் போட்டியிட்டன. இதில் மல்லாகம் மகாவித்தியாலய அணி 28:26, 26:24, என்ற செட் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை பெற்று கொண்டது.

## மாவட்ட மட்ட வலைப்பந்து யாழ்.பல்கலை சம்பியன்

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சம்பியனாக யாழ்ப்பாணப் பல்கலை அணி தெரிவாகியுள்ளது.

முதல் சுற்றைக் கைப்பற்றிய இராமநாதன் மகளிர் அணியினால், தொடர்ந்து வந்த மூன்று சுற்றுக்களிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியின் எழுச்சியை எதிர் கொள்ள முடியாமல் போக, யாழ்பாணப் பல்கலைக்கழக அணி இலகு வெற்றி பெற்று சம்பியனாகியது.

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம், கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் மற்றும் இளையோர் அமைப்பு ஆகியன இணைந்து, மக்கள் வங்கியின் அனுசரணையில்யாழ்.மாவட்ட 18வயதுக்குமேற்பட்ட வலைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை கடந்த செவ்வாய்க்கிழமை வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் நடத்தியது. இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் அணி மோதியது.

தொடக்கத்தில் உத்வேகமாக விளையாடிய இராமநாதன் மகளிர் அணி, முதல் சுற்றினை 11:09 என்றபுள்ளிகள் அடிப்படையில் வென்றது.


எனினும் இரண்டாவது சுற்றில் சுதாகரித்துக் கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி இரண்டாம்சுற்றினை 11:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி ஆட்டத்தில் விறுவிறுப்பினை ஏற்படுத்தியது.

தொடர்ந்து 3 ஆம், 4ஆம், சுற்றுக்களில் உத்வேகத்துடன் விளையாடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, 14:06, 15:09 என்று அச்சுற்றுக்களையும் கைப்பற்றியது.

இறுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி முழு செட்களிலும் சேர்த்து 49:31 என்றபுள்ளிகள் அடிப்படையில் வென்று மாவட்ட வலைப்பந்தாட்டச் சம்பியனாகியது.







கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்ற போது...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாத்தளைப் புதைகுழி ஜே.வி.பி காலத்தை சேர்ந்தது?

## வல்லுநர்கள் தெரிவிப்பு

மத்திய மாகாணத்தில் மாத்தளை நகரில் காணப்பட்ட மனிதப் புதைகுழியொன்றில் கண்டுபிடிக்கப்பட்ட 150க்கும் மேற்பட்ட மனித உடல்கள், 1980களின் பிற்பகுதியில் அங்கு புதைக்கப்பட்டவையாக இருக்கலாம் என்று வல்லுநர்கள் கூறியிருக்கிறார்கள்.

இந்தக் காலகட்டம் என்பது இடதுசாரிக் கட்சியாக கருதப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சி உச்சக் கட்டத்தை அடைந்திருந்த சமயத்துடன் ஒத்துப்போகிறது.

எனவே இந்தக் கொலைகள் அரசியல் ரீதியான கொலைகளாக இருந்திருக்கலாம் என்ற சந்தேகங்களுக்கு வலுச்சேர்ப்பது போல தோன்றுகிறது.

இந்த மனித புதைகுழிகள் கடந்த நவம்பர் மாதம் கட்டுமானப் பணி தொழிலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட உடல்கள் 1940களில் ஒரு பெரியம்மை தொற்றுநோய் ஏற்பட்ட போதோ அல்லது மண் சரிவிலோ இறந்தவர்களின் உடல்களாக இருக்கலாம் என்றும் அதிகாரிகள் கூறியிருந்தார்கள். (எ-11)

# படிக்கட்டு இடிந்து 37 பேர் காயம்

கொழும்பு நூதனசாலையில் அமைந்துள்ள படிக்கட்டுக்கள் இடிந்து வீழ்ந்ததில் சுமார் 37 மாணவர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்த மாணவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# தமிழக எதிர்ப்பை...

தோற்றுவிக்கும் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயும் மாநாடொன்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையில், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் சிரேஷ்ட அமைச்சர்களான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி திஸ்ஸ விதாரண, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டியூ குணசேகர ஆகியோரும் மத குருமார்களும், புத்திஜீவிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அமைச்சர் வாசுதேவ தெரிவித்தவை வருமாறு,

நாட்டில் இயங்குகின்ற எந்த அமைப்புக்களையும் குழுக்களையும் தடை செய்ய முடியாது.

இருப்பினும் நாட்டின் பிரிவினைவாதத் தீயை உருவாக்கும் வகையில் செயற்படும் குழுக்களது நடவடிக்கைகளை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் இந்த மாநாட்டில் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளோம்.

அத்துடன் ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கு நாட்டின் தற்போதைய நிலை குறித்து தெளிவுபடுத்துவதுடன் நாட்டு மக்களை தெளிவுபடுத்தும் முகமாக எதிர்வரும் சிங்கள-தமிழ்ப் புத்தாண்டு முடிந்தவுடன் நாடளாவிய ரீதியில் மாபெரும் மாநாடொன்றை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

நாட்டில் இயங்குகின்ற எந்த அமைப்புகளையும் தடை செய்ய முடியாது. இருப்பினும் இனங்களுக்கிடையில் பிரிவினையை தோற்றுவிக்கும் வகையில் அந்தக் குழுக்கள் செயற்படுமாயின் அவற்றுக்கு எதிராக நாம் நடவடிக்கை எடுப்போம்.

தமிழகத்தில் இலங்கைக்கு எதிராக அதிகரித்து வரும் எதிர்ப்புகளை இல்லாதொழிப்பதற்கும், இலங்கை தொடர்பில் தமிழகத்தின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் ஆளுந்தரப்பின் சிரேஷ்ட அமைச்சர்கள் வெகுவிரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளனர்.

இவ்வாறு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். (எ-11)

# கருணாவில் இருந்து...

குற்றச் செயல்களை மூடிமறைக்க முடியாது என மனிதவுரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பாரியளவில் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும் இது தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

கருணா தலைமையிலான படையினர் 26 ஆண்டு கால யுத்தத்தின் போது இடம்பெற்ற மிக மோசமான குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்கள்.

புலிகள் யுத்தக் குற்ற செயல்களில் ஈடுபட்டதாகவும், அந்தச் சந்தர்ப்பங்களில் தாம் குறித்த இடத்தில் பிரசன்னமாகியிருக்கவில்லை எனவும் கருணா அம்மான் பி.பி.சி செய்தி சேவையிடம் ஒப்புக் கொண்டுள்ளதாக பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் நேரடியாக பிரசன்னமாகியிருக்காவிட்டாலும் குற்றச் செயல்கள் தொடர்பிலான பொறுப்பு கருணா அம்மானுக்கு இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளைப் பேணியதாகவும் அவர்களிடம் யுத்தக் குற்றச் செயல் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கருணா கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இலங்கையர் என்ற...

விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கவால் உறுதிப்படுத்தப்பட்ட இலங்கையர் என்ற அடையாளம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

எனவே, இலங்கையர் என்ற அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டு நாட்டில் அனைவரும் ஐக்கியமாக வாழ வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க் கட்சி தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கையர் என்ற அடையாளத்தை நமக்கு உறுதிப்படுத்திக் கொடுத்தவர்தான் டி.எஸ்.சேனநாயக்க. இருப்பினும் இலங்கை சுதந்திரமடைந்து கடந்த 30 வருட காலத்தில் நாட்டு மக்கள் சுதந்திரமின்றி வாழ்கின்றனர். இலங்கையர் என்ற அடையாளம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

1956ஆம் ஆண்டு தனிச் சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது நாட்டில் பிரிவினை உருவானது. இதனை அடுத்த 31 ஆண்டுகளின் பின்னர் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் அரச கரும மொழியாக்க அரசமைப்பில் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

நாட்டில் பிரிவினைவாதத்தால் ஏற்பட்ட யுத்தத்தால் தமிழ் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர். ஆப்கானிஸ்தானியர்களை விட அதிகம் பாதிக்கப்பட்டனர். இருப்பினும் தமிழ் தலைவர்கள் இலங்கையில் பிரிவினையை ஏற்படுத்தக் கூடாது என நினைக்கின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி, நாம் இலங்கையர் என்ற உரிமை வேண்டும் என்கிறார். அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் நான் இலங்கையராகப் பிறந்தேன். இலங்கையராகவே வாழ விரும்புகின்றேன் எனத் தெரிவிக்கின்றார்.

யுத்தத்தில் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டாலும், இலங்கையர் என்ற அடையாளம் தமக்கு வேண்டும் எனக் கூறுகின்றனர்.

இதைத் தான் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையும் கூறுகின்றது. இலங்கையர் என்ற தனித்துவம் வலியுறுத்தப்பட வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. இதைத்தான் அமெரிக்காவும் கூறுகின்றது. ஐ.நா மனித வுரிமை பேரவையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளையும் கூறுகின்றார். இதனை உறுதிப்படுத்த வேண்டிய தேவை எமக்குள்ளது.

எனவே இலங்கையர் என்ற தனித்துத்தை உருவாக்கி நாட்டில் ஐக்கியத்தை ஏற்படுத்த நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (எ-11)

# இன்னொரு பயங்கர...

தாக்குதலை நினைவுபடுத்தும் வகையில் அவ்விடத்தில் அண்மையில் ஜனாதிபதியினால் நிர்மாணித்து திறந்து வைக்கப்பட்ட நினைவாலயம் வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறு இடம்பெற்ற குரூரத்தனமான சம்பவங்களை நிர்மாணித்து மக்கள் மத்தியில் ஒரு குரூரமான உணர்வை உருவாக்கவே இந்த அரசாங்கம் நினைக்கின்றது. அது தான் வட, கிழக்கில் இனங்களுக்கிடையிலான யுத்தம் உருவானதற்கு அடிப்படைக் காரணமாகும். அது இன்று வியாபித்து இலங்கை பூராகவும் உருவாக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையில் நான்கு பிரதான மதங்களை தவிர வேறு மதங்கள் இருக்கக் கூடாதென அரசாங்கத்தினால் சட்டமொன்று உருவாக்கப்படவுள்ளது. இது எவ்வாறு முடியும்? எவருக்கும் எந்த மதத்தையும் பின்பற்றுவதற்கு உரிமையும் சுதந்திரமும் உள்ளது.

தமிழ்நாட்டில் இடம்பெறும் எதிர்ப்புக்கள் மற்றும் ஜெனிவா பிரேரணை என்பன இலங்கைக்கு எதிரானது அல்ல எனவும் அது ராஜபக்ஷ தலைமைக்கு எதிரானது எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நீதி நியாயத்தை சிறு துளியேனும் பொருட்படுத்தாது ஆட்சி நடத்திச் செல்லும் ராஜபக்ஷ தலைமையின் ஊழல் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து 2014ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைக்கவுள்ளதாக அவர் குறிப்பீட்டார். (எ-11)

G.A.Q
பேராதனை
2013 புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் பல்கலைக்கழகத்தால் கோரப்பட்டுள்ளது
விரிவுரைகள் ஆரம்பம்
30.03.2013
சனி ,காலை-8.00 மணி
- பதிவுகள் எமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.
- யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புதிய பிரிவுக்குரிய 1st in com. G.A.Q. part-I. B.A final இவற்றுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
(2262)
BEACON
யாழ் நகர்

# விபச்சார...

பெற்றுத் தருவதாகக் கூறி அவர்களை வைத்து இவ்விடுதியானது இயக்கப்பட்டதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வருகின்றது.

முற்றுகையின்போது, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் யுவதிகள் விடுதியில் பிடிக்கப்பட்டனர்.

விடுதியினை பிடித்தபோது பொலிஸாருக்கு பிரதேச செயலாளரும் மாநகர ஆணையாளரும் பலமுறை தகவல் சொன்னபோதும் சம்பவ இடத்திற்கு பொலிஸார் இறுதிவரை சமுகமளிக்கவில்லை.

இதேவேளை, அவ்விடுதியில் இருந்து அடையாள அட்டைகள் சிலவும் மீட்கப்பட்டுள்ளன.

விடுதியிலிருந்து பிடிபட்டவர்கள் இளவயதுடையவர்கள் என்பதால் அவர்களின் எதிர்காலம் கருதி எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இதேபோன்று சட்டவிரோதமாக இயங்கும் விடுதிகள் முற்றுகையிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ-4,11)

வீடு விற்பனைக்கு
அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் இரண்டு பரப்புக்காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
Sharp Communication Centre
(குபால் கந்தோருக்கு முன்பாக)
(2259)

# அரசிலிருந்து வெளியேறி...

யினருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முதல்வர் ஜெயலலிதா உள்ளிட்ட சிலரின் ஆசைப்படி நாங்கள் மத்திய அரசிலிருந்து வெளியே வந்து விட்டோம். இப்போது என்ன நடந்தது விட்டது? ஈழத்தமிழர்களின் பிரச்சினைகள் தீர்ந்து விட்டதா? அல்லது அமெரிக்கத் தீர்மானத்தின் மீது ஐ.நா மனிதவுரிமை கவுன்சிலில் இந்தியா திருத்தம் கொண்டு வந்து விட்டதா? அல்லது பாராளுமன்றத்தில் தான் தீர்மானம் எதுவும் கொண்டு வந்து விட்டார்களா? என கேள்வி எழுப்பியுள்ளார்.

மத்திய அரசிலிருந்து தி.மு.க வெளியே வந்து விட்டது. இது ஒன்றுதான் நடந்துள்ளது. ஆனால் இதற்காக கட்சியினர் யாரும் கவலைப்பட வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் உச்சக் கட்டப் போர் இடம்பெற்ற 2009 ஆண்டில் தி.மு.க மத்திய அரசிலிருந்து வெளியேறியிருந்தாலும் இதே நிலை தான் என்பதை நடுநிலையோடு சிந்தித்துப் பார்ப்பவர்கள் உணர்வார்கள்.

அப்போதே வெளியேறியிருந்தால் இலங்கைத் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள் என்பதெல்லாம், தி.மு.க கழகத்தின் மீதுபழியைப் போடுகின்ற ஒரு செயலே தவிர வேறல்ல என்பது தான் உண்மை.

தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்த போதும், இல்லாத போதும் ஈழத்தமிழர்களுக்காக இத்தனைப் போராட்டங்களையும் நடத்தியது. அரசியல் ரீதியாகப் பல்வேறு இழப்புகளுக்கும் ஆளானது.

ஆனால் ஜெயலலிதாவிற்கு இலங்கை தமிழர்கள் மீது எத்தனை நாட்களாக அக்கறை எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

16-4-2002 அன்று இதே சட்ட சபையில் பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிற்கு கொண்டு வரவேண்டுமென்று ஜெயலிதா தீர்மானம் நிறைவேற்றினார்.

17-1-2009 அன்று இலங்கைத் தமிழர் கள் கொன்று குவிக்கப்பட்டபோது, போர் என்றால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம்தான் என்று ஜெயலலிதா கூறினார்.

இதையெல்லாம் மறந்துவிட்டு நான் இரட்டை வேடம் போடமாட்டேன் என்று கருணாநிதி தெரிவித்துள்ளார். (எ-11)

# கச்சதீவு வேண்டுமா...

தலைவர் சுதத் மல்லிகாராச்சி தெரிவித்துள்ளார்.

அந்த நிபந்தனை என்னவெனில், இலங்கையில் உள்ள 8 இலட்சத்து 42 ஆயிரத்து 323 இந்தியத் தமிழர்களை மீண்டும் இந்தியாவுக்கே அழைத்துச் சென்று விட வேண்டும்.

இந்திய அரசாங்கம் இதற்கு விருப்பம் தெரிவித்தால், தாமதமின்றி அந்த நடவடிக்கைகளை எடுக்குமாறும், தேயிலை தோட்டங்களில் வேலைக்கு ஆட்கள் தேவையாக இருந்தால் தென் சீனாவின் யுவான் மாகாணத்தில் அல்லது வியட்நாம் அல்லது லாவோஸ் ஆகிய நாடுகளில் ஒன்றில் இருந்து பௌத்த மதத்தை சேர்ந்த யுவதிகளை இலங்கைக்கு அழைத்து வருமாறும் மல்லிகாராச்சி மேலும் கூறியுள்ளார். (எ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... ரோட், யாழ்ப்பாணம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org